॥ श्रीरामजयम् ॥

॥ श्रीमद्वाल्मीकिरामायणम् ॥

॥ सुन्दरकाण्डम् ॥

॥ श्रीरामपट्टाभिषेकसर्गादिसहितम् ॥

SRI RAM PUBLISHERS
22, Armenian Street,
MADRAS-1.

॥ श्रीरामजयम् ॥

॥ श्रीमद्वाल्मीकिरामायणम् ॥

सुन्दरकाण्डम्

॥ सुन्दरकाण्डमाहात्म्य-श्रीरामपट्टाभिषेकसर्गादिसहितम् ॥

धर्मालयसंस्करणम्

M. N. RAMASWAMY IYER MEMORIAL EDITION

Text in Sanskrit with word for word Tamil Translation in Prose Order.

By

The Late Rao Sahib P. S. KRISHNASWAMI IYER,

Dharmalaya, Mylapore.

Published by

SRI RAM PUBLISHERS

321, Thambu Chetty Street

MADRAS-1

Price : Rs. 15/-

Third Edition :
July 1969.

PRINTED AT

RAMAYANA PRINTING WORKS,

MADRAS-4.

॥ श्रीः ॥

॥ विषयानुक्रमणिका ॥



Late M. N. RAMASWAMI IYER
BANKER, PALGHAT

ஸ்ரீராமஜெயம்

ஸுந்தரகாண்டமாஹாத்ம்யம்

பார்வதி கேட்கிறாள்:—

ஹே மஹேச்வரா! ஸ்ரீமத் ஸுந்தரகாண்டத்தின் மாஹாத்மியத்தை விசேஷமாக தங்கள் முகத்திலிருந்து விஸ்தாரமாகக்கேட்க நான் விரும்புகிறேன்.

மஹேச்வரர் சொல்லுகிறார்:—

ஹே பார்வதி! ஸ்ரீ ஸுந்தரகாண்டத்தின் மிகவும் ரஹஸ்யமான மஹிமையை ஸங்கிரஹமாக உனக்குச் சொல்லுகிறேன். மிகவும் பிரியத்துடன் கேட்பாயாக. அதை விஸ்தாரமாகச் சொல்ல ஸ்ரீராகவனே சக்தன். எவ்விதம் சகல தேவர்களிலும் ஸ்ரீராமன் உத்தமனே, எவ்விதம் சகல விருக்ஷங்களிலும் கல்பக விருக்ஷம் நிகரற்றதோ, ஸமஸ்த ரத்னங்களிலும் கௌஸ்துபம் எவ்விதம் ச்லாக்யமோ, அவ்விதமே ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸுந்தரகாண்டம் சிறந்தது. இந்த ஸுந்தரகாண்டத்தை பக்தியுடன் பாராயணம் செய்தாலும், கேட்டாலும், பிரவசனம் செய்தாலும் ஸர்வாபீஷ்டங்களும் சித்திக்கின்றன. அனர்த்தம் இல்லாதாகும். ஸகல ஸம்பத்துக்களும் பூர்ணமாக உண்டாகும். எல்லா ரோகங்களும் நீங்கும். விசேஷமாக மஹாரோகிகளுக்கு இது திவ்யௌஷதம். மஹௌஷதங்களால் மாற்றமுடியாத க்ஷயம், அபஸ்மாரம், குஷ்டம் முதலிய ரோகங்களும், ஸ்ரீமத் ஸுந்தரகாண்டத்தை விதிமுறையாக 68 தடவை பாராயணம் செய்தால் ஸ்ரீராமன் கருணையால், நாசமடையும். ஸந்தேஹமில்லை. இவ்விஷயத்தில் ஸுந்தரகாண்டத்தின் மஹிமையை விளக்கிக் கூறுகின்ற முன்காலத்தில் நடந்த இதிஹாஸத்தை பெரியோர்கள் கூறுகின்றனர். அதை நான் உனக்கு கூறுகின்றேன். மிக சிரத்தையுடன் கேட்பாயாக.

பூலோகத்திற்கே அலங்காரமான காஞ்சீபுரம் என ஒரு பட்டணம் உண்டு. அழகான அந்தப் பட்டணத்தில் சோளதேசத்தரசர்கள் வஸிக்கின்றனர். அவிடத்தில் மிக தார்மிகனும் அனேக யாகங்கள் செய்தவனும் ஸாது ஜனங்களுக்கு அடைக்கலமுமான வம்சாங்குரன் என்ற அரசன் மனோரமை என்ற தன் மனைவியுடன் வஸித்துவந்தான். உனது அம்சாவதாரமான இரண்டு கைகளுடைய காமாக்ஷீதேவியினுடையவும், ஏகாம்பரநாதனென்று பெயருடைய என்னுடையவும் திருவடிகளில் மிக பக்திகொண்டவனாகவும், ஹஸ்திகிரிநாதனாகிய வரதன் என்ற பெயருடைய ஸ்ரீஹரியினுடைய புக்திமுக்திகளைக் கொடுக்கவல்லமையுள்ள சேவையில் ஈடுபட்டவனாகவும், ஒரே ஈசுவரன்தான் மூன்றாக பிரிந்திருக்கிறார் என்ற ஞானிகளின் வசனத்தை நம்பியவனாகவும், உலகத்தை பகவத்ஸ்வரூபமாக தியானித்துக்கொண்டும், சிற்றரசர்களுடைய கிரீடங்களிலிருக்கும் ரத்னங்களால் விளங்கும்படி செய்யப்பட்ட தன் மலரடிகளையுடையவனாகவும் அழகில் மன்மதனையொத்தவனாகவும், காந்தியில் சூரியன் போன்றவனாகவும், தர்மமொன்றையே கைப்பற்றி பூலோகம் முழுவதையும் ஆண்டு வந்தான். ஐசுவரியங்கள் எல்லாம் நிறைந்திருந்தும் அவனுக்கு ஸந்ததியில்லாமல் உண்டான வருத்தம் அந்த அரசனை மனதில் தைத்த ஒரு முள்ளுபோல் வருத்தமுறச்செய்தது. ஒரு பிள்ளை பிறப்பதற்காக மிகுந்த தக்ஷிணைகளுடன் கூடின அனேக அச்வமேதயாகங்களைச் செய்தான். உன்னையும், என்னையும், வரதராஜரையும் மிக

வைபவத்துடன் ஆராதித்தான்; அனேக பிராமணஸந்தர்ப்பணே செய்தான். அப்படியிருக்க ஒரு நாள் காமாக்ஷியம்மன் ஆலயத்திலிருந்து வெளியே வரும் பொழுது தியானத்தில் ஆழ்ந்திருக்கும் ஒரு யோகீசுவரனைக் கண்டான். காந்தியால் சூரியனைப் போலிருக்கும் அவரைப் பார்த்து அச்சங்கொண்டவனுய் சற்று விலகி நின்று அவர் கண் திறக்கும் சமயத்தை எதிர்பார்த்து நின்றுன். அவரும் தாமதியாமல் ஸமாதி விட்டு கண்களைத் திறந்தார். அந்த பிராமணுேத்தமனே அரசன் பக்தியுடன் கால்களில் நமஸ்கரித்தான். பிறகு அவரால் நீ யார்? என்று விசாரிக்கப்பட்டவனுய் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான்.

யோகீசுவரர் கூறினுர் :—அரசே! காரணமில்லாமலே என்னிடம் வைத்திருக்கும் இந்த உனது சிறந்த பக்தியால் நான் மிகவும் ஸந்தோஷமடைந்தேன். இப்பொழுது என்னிடமிருந்து நீ கோரும் விருப்பத்தை தெருவிப்பாயாக.

அரசன் கூறினுன் :-தங்களுக்கு ஒன்றுமே செய்யாத என்னிடம் தாங்கள் சந்தோஷமடைந்தீர்கள் என்பதால் நான் மிக தன்யனுனேன். தங்களால் அனுக்கிரஹிக்கப்பட்டேன். என் குலமும் மிகப் பரிசுத்தமாயிற்று. ஹே! பிரபுவே! தங்களைப்போன்றவர்களுடைய அனுக்கிரஹத்தால் நான் ஐசுவரியங்கள் நிறைந்தவனுகவே இருக்கின்றேன். ஆனுல் என் வம்சத்தை வளர்க்கக்கூடிய ஒரு புதல்வன் எனக்கு இன்றுவரையில் பிறக்கவில்லை. அதற்காக தக்ஷிணைகள் நிறைந்த அனேக யாகங்கள் செய்யப்பட்டன. பிதுருக்கள் திருப்திசெய்யப்பட்டனர். யாசகர்களுக்கு விருப்பத்திற்கதிகமாகவே கொடுக்கப்பட்டது. எனது வம்சம் என்னுடனே முடிவடைந்துவிடும் என்ற வருத்தத்தால் என் மனம் இராப்பகலாக தபிக்கின்றது. புத்தி தடுமாறுகிறது.

மஹேசுவரர் கூறினுர் :— இவ்விதம் கூறப்பட்ட அந்த யோகீசுவரரும் சிறிதுநேரம் தியானித்துப்பார்த்து மனசந்துஷ்டியடைந்தவராய் அரசன் மனதை சந்தோஷமுறச்செய்துகொண்டு மிகத் தெளிவான முறையில் சொன்னுர்.

யோகீசுவரர் கூறினுர்:—அரசே! முன் ஜன்மத்தில் நீர் ஓர் பிராமணுேத்தமனுக பிறந்தீர். ஸ்ரீ ரங்கநாதனே ஆராதித்துக்கொண்டு அவருக்கு அனேக தீபங்களை வைத்தீர். அந்த புண்ணிய வைபவத்தால் இந்த ஜன்மத்தில் அரசனுக பிறந்தீர். ஆனுல் முன் ஜன்மத்தில் நீர் தங்கள் மாப்பிள்ளையிடம் விரோதித்துக்கொண்டு புத்திரனே விரும்பி காமுற்றவளாய் தன் கணவனிடம் செல்ல விரும்பி மனதிற்குள்ளேயே வருந்திக்கொண்டிருந்த தன் மகளை தங்கள் கிருஹத்திலேயே தடுத்துவைத்திருந்தீர். அவளும் அம்மிக பெரும் வருத்தத்துடனே புத்திரப் பேறில்லாமலேயே மரணமடைந்தாள். அந்த பாபநிமித்தமாகவே தங்களுக்கு இந்த ஜன்மத்தில் புத்திரன் பிறக்கவில்லை. அப்படிப்பட்ட மஹாபாபத்திற்கு பிராயச்சித்தத்தை நான் காணவில்லை. ஆகிலும் மிக சூக்ஷ்மமாக சமாதியிலிருந்து ஆலோசித்துச் சொல்லுகிறேன். ஆகண்டகாவேரியையடைந்து தாருகாவனம் (திருப்பளாத்துறை) முதல் பவானீசங்கமம் வரையில் இருகரைகளிலுமிருக்கும் சிவன்கோவில்களிலும் விஷ்ணுகோவில்களிலுமிருந்துகொண்டு அகண்டகாவேரியில் ஸ்நானஞ்செய்து காலை சந்தியாவந்தனுதிகளை செய்துகொண்டு ஸங்கம காலம் (சூர்யோதயத்திலிருந்து 6 நாழிகை) வந்தபொழுது முன்ஜன்மத்தில் செய்த பாபத்தை நன்ருக உச்சரித்து முறைப்படி ஸங்கல்பஞ்செய்து, சுவர்ணங்களாலும் வெள்ளிகளாலும் பிராமணர்களை திருப்திசெய்து அவர்களுடைய அனுமதியைப்பெற்று ஸ்நானம் பண்ணி பிராமணர்களுக்கு பசு, பூமி, ஸ்வர்ணம் முதலியவற்றை மிக ஆதரவுடன் கொடுத்து, பிரம்மசரியத்தை மேற்கொண்டு மனைவியுடனும் பந்துக்களுடனும் கூடவே ஹரிஹரர்களை பூஜை செய்துகொண்டு

ஒரு வருஷகாலம் வஸிக்கவேண்டும். அப்படியாகில் எல்லா லக்ஷணங்களுடனும் கூடின ஒரு புத்திரன் பிறப்பான். இவ்விதம் சொல்லி அந்த யோகீசுவரர் அரசனுல் மிக பக்தியுடன் பின்துடர்ந்து விருந்திற்கழைக்கப்பட்டும் மௌனத்தை மேற்கொண்டு தன்னிஷ்டப்படி எங்கயோ சென்றுவிட்டார். அரசனும் யோகீசுவரர் கூறியதை மனதில் வைத்துக்கொண்டு அவர் கூறியபடியே வேண்டிய திரவ்யங்களுடன் செய்துவந்தான். பிறகு மனுரமையும் விதியின் வைபவத்தால் கர்ப்பந்தரித்தாள். அப்பதிவிரதை ஒளியில் சூரியன்போன்ற ஒரு புத்திரனைப் பெற்ருள். அந்தக்குழந்தைக்கு வெகுவிமரிசையாக ஜாதகர்மம் முதலியவற்றை செய்தான். அந்தக் குழந்தையும் வளர்பிறைபோல் வளர்ந்தான். அரசனும் ஆனந்தக்கடலில் மூழ்கியவனுய் தன்னை தேவன் என்றே எண்ணினுன். உபநயனத்திற்குசிதமான காலத்தில் உபநயனஞ்செய்து குருகுலத்திற்கனுப்பினுன். பாலச்சந்திரன் என்ற பெயருடைய அந்த அரசகுமாரனும் ஆறு அங்கங்களுடன் கூடி வேதங்களையும் அவ்விதமே தனுர்வேதம் முதலியவைகளையும் படித்து முறைப்படி விரதங்களையும் முடித்துக்கொண்டு தந்தை வீட்டில் வஸித்துவந்தான். வீரியத்திலும் வினயத்திலும், படிப்பிலும், வாதிகளை ஜயிப்பதிலும், அந்த ராஜகுமாரனை நிகரற்றவனுகக் கண்டு, கலிங்கதேசத்தரசன், காமனின் வெற்றிக்கொடி போன்றவளும், வீணை வாசிப்பதில் திறனுற்றவளும், அச்சம், அடக்கம் என்பவைகளுக்கு இருப்பிடமானவளுமான அனங்கசேனையென்ற தன் மகளை அலங்கரித்து மிக வேண்டிக்கொண்டு அவனுக்குக்கொடுத்தான். அந்த அரசகுமாரனும் நிலாவுடன் சந்திரன் போல் அவளுடன் மிகவும் விளங்கினுன். பிரஜைகளால் மிகவும் கொண்டாடப்பட்டவனுன அவ்வரசகுமாரன் தான் தன் தகப்பனை இளைப்பாற்றி பிரஜைகளுக்கு பிரியத்தை செய்துகொண்டு ராஜ்யகாரியங்கள் யாவற்றையும் தானுகவே செய்துவந்தான். இவ்விதம் நாட்கள் சென்றபொழுது வம்சாங்குர மஹாராஜன் ராஜ்ய பாரத்தை புத்திரனிடம் கொடுத்து தபோவனம் செல்ல எண்ணினுன். இதன் மத்தியில் பாலச்சந்திரன் நந்நடத்தையுடையவனுக இருந்தபொழுதும் முன் ஜன்மத்தில் செய்த பாபத்தால் ராஜயக்ஷ்மா என்ற க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டான். அரசனும் தன் புத்திரன் வியாதியால் வருந்துவதைக் கண்டு மனம் வருந்தியவனுய் சிறந்த வைத்யர்களை வரவழைத்து பலவாருக சிகித்ஸை செய்தான். அந்த பாபசாந்திக்காக வேதமோதிய லக்ஷக்கணக்கான பிராமணர்களுக்கு போஜனமளித்தான். ஏழைகளான பிராமணர்களுக்கு பசுக்களையும், பூமிகளையும், ஸ்வர்ணத்தையும், வெள்ளியையும் தானஞ்செய்தான். ஏகாம்பரநாதனையும், காமாக்ஷியம்மனையும் துக்கங்களைப்போக்கடிக்கும் வரதராஜஸ்வாமியையும் அர்ச்சனை, அபிஷேகம் முதலியவற்ருல் பலவாருக ஆராதனஞ்செய்தான். அப்படியிருந்தும் வியாதி ஒவ்வொருநாளும் விருத்தியடைந்தது. எல்லோரும் துயரக்கடலில் ஆழ்ந்தனர். அரசன் இவ்வருத்தத்தை பொறுக்காதவனுய் ராஜ்யபாரத்தை மந்திரிகளிடம் ஒப்படைத்து தான் பிராயோபவேசஞ்செய்ய எண்ணங்கொண்டான். அத்தருணத்தில் ஞானிகளில் சிறந்த அந்த யோகீசுவரர் காமாக்ஷிதேவியின் சிறந்த ஆலயத்தில் முன் தோன்றிய அதே இடத்தில் தோன்றினுர். வம்சாங்குரராஜனும் காமாக்ஷிதேவியை வணங்கி வெளியே வரும்போது அந்த யோகிசுவரனைக்கண்டு அளவுகடந்த ஆனந்தமடைந்தான். அரசனும் அம்மஹானை நூற்றுக்கணக்காக நமஸ்கரித்து அவரால் குசலம் கேட்கப்பட்டவனுய் அழுதுகொண்டே பதில் சொன்னுன்.

அரசன் கூறுகிருன் :— எல்லா விஷயங்களும் அறிந்தவரும், ஆச்ரிதர்களுக்கு கற்பகவிருக்ஷம்போன்றவரும், மஹிமைபெற்றவருமான ஹே ! ஸ்வாமி ! தங்களுக்கு தெரிந்ததைக்காட்டிலும் வேறு என்னவிதமான க்ஷேமத்தை நான்

கூறுவேன். தங்கள் அருளால் எனக்கு ஸர்வாங்கஸுந்தரனுன ஒரு புதல்வன் ஜனித்தான். அவன் வித்தைபெற்றவனுகவும், வீரியம் படைத்தவனுகவும், வினயமுடையவனுகவும், வில்லாளியாகவும், யௌவனம் பெற்றவனுகவும் ஆனுன். ராஜ்யபாரம் பூராவும் ஏற்கவல்லவனுன அவனிடத்தில் ராஜ்யபாரத்தை கொடுத்து நான் தபோவனத்திற்கு போக துரைப்படும்பொழுது தற்செயலாக பாலசந்திரன் க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டான். சிறந்த வைத்யர்களால் பற்பல சிகித்ஸைகள் செய்யப்பட்டன. என்றுலும் தேவதாராதனமும் பற்பல செய்யப்பட்டது. வியாதியும் மனதை நடுங்கச்செய்துகொண்டு நாளுக்குநாள் வளர்ந்துவருகிறது. நானும் பெரும்துயரத்தால் பிராயோபவேசஞ்செய்யத் துணிந்தேன். இந்த ஸந்தர்ப்பத்தில் தங்கள் தரிசனத்தையடைந்து மனமகிழ்ந்தவனுக என் துயரம் நிவர்த்தியாவதற்காக நிந்திருவடிகளை சரணமடைந்தேன். தங்கள் உத்தரவுபடி நடக்க ஸித்தமாக இருக்கேன். அதற்கு மாறுபாடில்லை.

யோகீசுவரர் கூறுகிருர்:—நான் முந்தியே உனது இந்த துக்கத்தையறிந்திருக்கிறேன். முன் ஜன்மத்தில் உன்புத்திரன் மிகக் கெட்டவனுய் ஸாது பிராமணர்களுடைய ஸ்ரீராமபூஜைக்காக சேர்த்துவைக்கப்பட்ட பூஜாதிரவ்யங்களை திருடினுன். அதைக்கொண்டு தன் உடலை வளர்த்திக்கொண்டு மதோன்மத்தனுகக் கூத்தாடினுன். ஆனுல் ஒரு வருஷகாலம் இடைவிடாது இராமாயணக் கதையை கேட்டதாலும், ஸ்ரீராமபூஜையை தரிசித்ததாலும், பூஜைக்கு வேண்டியவற்றை கொண்டுவருவதாலும், புஷ்பம் முதலியவற்றை கொண்டுவந்து கொடுத்ததாலும் இப்பொழுது தங்களுக்கு புத்திரனுகப்பிறந்தான். ஸ்ரீராமபூஜாத் திரவ்யங்களைத் திருடியதால் க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டான். ஆகையால் அப்பாபநிவிருத்திக்காக ஒரு பிராயச்சித்தக்தை சொல்லுகிறேன். அதை நீர் செய்வீராக.

அரசன் கூறுகிறுன்:-தாங்கள் அந்த விதியை கூறுவீர்களானுல் அதுவே எனக்கு பெரும் அனுக்கிரஹம். அந்த விதி எளிதில் செய்யமுடிவதாயிருந்தாலும், கஷ்டப்பட்டு செய்யவேண்டியதாக இருந்தாலும் நான் அதைச்செய்ய ஸித்தனுக இருக்கிறேன். எனது முன்ஜன்மத்திய புண்ணியக்குவியல்களால் தான் தங்களுக்கு என்னிடம் கருணையுண்டாயிற்று.

அறுபத்தெட்டாவர்த்தி

பாராயணஞ்செய்யவேண்டிய முறை.

யோகிசுவரர் கூறுகிருர் :— ஓ! அரசே! சொல்லுகின்றேன் கேளும். பிறகு நான் சொன்னபடி செய்வீராக. ஒரு திவ்யமான மண்டபத்தை நிர்மாணம் செய்து, அதை வாழை, தேங்காய், முத்து, மேக்கட்டி முதலியவற்ருல் அலங்கரித்து, அவ்விடத்தில் நான்குமூலையாக ஒரு வேதியைச் செய்து, அதை ஒருபுது வெண்பட்டால் மறைத்து, அதில் ஆறுபடி நெல்லைப்போட்டு, அதன்மேல் மூன்றுபடி வெளுத்த அரிசியை வைத்து, அதன்மேல் 18 பலம் தங்கத்தால் செய்யப்பட்ட பரந்த வாயுடைய பாத்திரத்தில் முத்து நிரப்பி, அதை தங்கவஸ்திரத்தால் (ஜரிகைத் துணி) மூடிவைத்து, அதன்மேல் ஒரு பலம் தங்கத்தால் செய்யப்பட்ட தகிட்டில் நவாவரணங்களுடன் கூடின ஸ்ரீராமயந்திரத்தை எழுதிவைத்து, விதிமுறைப்படி பிரதிஷ்டை பூஜை இவைகளைச்செய்து, அதன்மேல் ஸீதை ஹனுமான் இவர்களோடு கூடின ஸ்ரீராமப்பிர திமையை தங்கத்தால் செய்துவைத்து, நல்ல தாமரை புஷ்பங்களாலாவது, துளஸியாலாவது, மல்லிகைகளாலாவது, சம்பகபுஷ்பங்களாலாவது, தாழம்பூக்களாலாவது ஸ்ரீராமஸஹஸ்ரநாமத்தால்

அர்ச்சனை செய்து, ஸ்ரீராமர்ஸந்நிதானத்தில் நியமத்துடன் ராமாயணத்திலிருக்கும் ஸ்ரீ ஸுந்தரகாண்டத்தை ஏகாக்ரசித்தனாக பாராயணம் செய்யவேண்டும். பிராதக்காலத்தில் ஒரு முஹூர்த்தமான பிறகு, மனச்சந்துஷ்டியுடன் ஆரம்பித்து மத்தியான்னத்திற்கு முந்தியே பாராயணத்தை முடிக்கவேண்டும். நெய்யுடன் கூடின அகண்டதீபத்தை ஏற்றி, ஒரு ராமபக்தனை ச்ரோதாவாக கல்ப்பித்து, 68 ஆவர்த்தி முடிகிறவரையிலும் ஒவ்வொரும் நாளும் பாராயணம் செய்யவேண்டும். பாராயணமுடிவில் அப்பம், பாயஸம் முதலியவற்றை நிவேதனம் செய்து, ஸ்ரீராமனை பூஜை செய்யவேண்டும். முதல்தடவை (ஆவர்த்தி) பாராயணம் முடிந்ததும் 12 பிராமணர்களை ஆராதிக்கவேண்டும். பிறகு இரண்டாவது தடவை முடிவுமுதல் ஒவ்வொரு ஸங்கியை அதிகமாக பிராமணர்களை தேன், பாயஸம் முதலியவைகளோடு ஆராதிக்கவேண்டும். 68 நாட்களில் ஸுந்தரகாண்டம் 68 தடவை பாராயணம் செய்து முடிக்கப்பட்டால் அதுவே உத்தமம். 4 மாதங்களில் 68 தடவை பாராயணம் முடிக்கப்பட்டால் மத்யமம். 6 மாதங்களால் முடிந்தால் அதமம். யஜமானன்தானே படிப்பது உத்தமம். பிராமணமுகமாக படிக்கச்செய்தால் அது மத்யமம், அனேகம் பேர்கள் படிப்பார்களேயானால் அது அதமம், என்று பாராயணக்ரமம் சொல்லப்பட்டிருக்கின்றது. 68-ம் தடவை (ஆவர்த்தி) முடிந்தால் கிரமமாக ஐந்து அல்லது ஆறுநாட்களில் யுத்தகாண்டத்தையும் படித்து ஸ்ரீராமபட்டாபிஷேகம் நடத்தவேண்டும். 68-ாவது தடவை (ஆவர்த்தி) பாராயணம் ஆரம்பித்தமுதல் யுத்தகாண்டம் முடியும் வரையில் அந்தந்த நாட்களில் காலையில் பாராயணம் செய்த ஸர்க்கங்களை, சகல சாஸ்திரார்த்தங்களை அறிந்தவரும், ராமபக்தனுமான ஓர் பிராமணனை பூஜை செய்து வக்தாவாக கல்ப்பித்து ஸாயங்காலங்களில் பக்தியுடன் பிரவசனம் செய்விக்கவேண்டும் அவ்விதம் பிரவசனம் செய்யப்பட்ட ஸ்ரீராமசரிதத்தினுடைய உத்தம ரஸவத்துக்களான அர்த்தங்களை கேட்கவேண்டும். இவ்விதம் இந்த விரதத்தை செய்து முடித்தால் ஸ்ரீராகவன் அனுக்கிரகிப்பார். அச்வினீதேவர்களாலும் மாற்றமுடியாத ரோகங்கள் கூட நசிக்கின்றன. தீர்க்காயுஸ்ஸையுமடைவான். புத்திரன் மித்திரன் இவர்களுடனிருக்கும் விரோதம் அனுகூலமாகும்; குடும்பகலகம் இல்லாதாகும்; துர்மரணம் உண்டாகாது. கடன் பாத்தியதை நீங்கும். சத்துருக்களை ஜயிக்கலாம். ரொம்பச்சொல்லியென்ன? எல்லா அபீஷ்டங்களும் ஸித்திக்கும். எவன் இந்த 68 தடவை பாராயணவிரதத்தைச் செய்கிருனே அவனுக்கு அணிமாதிகளான அஷ்டஸித்திகளும் ஸ்வாதீனங்களாகின்றன. யார் வைராக்யத்துடன் பக்தியோடுகூட இந்த விரதத்தைச் செய்கிருனே அவனீடத்தில் ஸ்ரீராகவன் சுக்ரீவனிடத்தில்போல ஸல்லாபம் செய்வார். ஹே! பார்வதி! இவ்விதம் ஒரு தடவையாவது 68 ஆவர்த்தி பாராயணத்தை முடித்ததால் அதன் பலன் எல்லாராலும் எல்லாவிடங்களிலும் அனுபவிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விதம் விரதத்தை அனுஷ்டித்ததால் அநேகம் வந்தியைகள் (மலடிகள்) கூட ஸ்ரீராமபிரஸாதத்தால் மடியில் குழந்தைகள் நிறைந்தவர்களாயிருந்தார்கள். ஆகையால் ஏழையாக இருந்தாலும்கூட எப்படியாவது சக்திக்கனுசரித்து சிலவுசெய்து இந்த விரதத்தை அனுஷ்டிக்கவேண்டும். இதைப் படிப்பதிலும், பிரவசனம் செய்வதிலும் பிராமணன் ஒருவனே அதிகாரியாவான். ஆனல் கேட்பதில் நான்கு வர்ணத்தாரும் அதிகாரிகளாவார்கள். சூத்திரர்களால் தேவாலயங்களிலும் மற்றவர்களால் பிராமணகிருஹத்திலோ அல்லது தேவாலயத்திலோ சங்கல்பம் செய்து இந்த விரதம் அனுஷ்டிக்கப்படவேண்டும். அதிகம் சொல்வதால் என்ன? கலிகாலத்தில் மனிதர்களுக்கு எல்லாவற்றையும் கொடுப்பதில் இந்த விரதம் கல்பகவிருக்ஷம்போலிருக்கின்றது. ஹே! பார்வதீ! மறுபடியும் நான் சொல்லுகிறேன்.

நீ சிரத்தையுடன் கேட்பாயாக. இவ்விதம் செய்ய சக்தியற்றவர்களுக்கு வேறு அனேகம் விதிகள் இருக்கின்றன. ஜனங்களுக்கு ஹிதத்தைக் கோருவதால் அவற்றை இப்பொழுது சொல்லுகின்றேன். ஸுந்தகாண்டத்தை 32 ஆவர்த்தி பாராயணம் செய்யவேண்டும். அதில் ஸீதை ஹனுமானிடம் சூடாமணியைக் கொடுப்பதைச் சொல்லும் 38-ாவது ஸர்க்கம் முடிய முதல் நாளிலும், அதிலிருந்து காண்டம் முடிய இரண்டாவது நாளிலுமாக 64 நாட்களில் 32 ஆவர்த்தி பாராயணம் செய்யவேண்டும். 72 நாட்களில் 24 ஆவர்த்தி பாராயணம் செய்யவேண்டும். அதில் ஸீதாதர்சனம் (15 ஸர்க்கம்) முடிய முதல்நாளிலும், அசோகவனமழித்தல் (41-ாவது ஸர்க்கம்) முடிய இரண்டாவது தினத்திலும், காண்டம் முடியும் வரையில் மூன்ருவது தினத்திலும் பாராயணம் செய்து 72 நாட்களில் 24 தடவை பாராயணம் செய்யவேண்டும். 48 நாட்களில் 12 ஆவர்த்தி பாராயணம் செய்யவேண்டும். அதில் முதல்நாளில் ஸீதாதர்சனம் (15 ஸர்ககம்) முடியவும், இரண்டாம் நாளில் सोऽवतीर्य द्रुमात्तस्मात् என்ற ஸர்க்கத்திற்கு (33 ஸர்க்கம்) முந்தியும், மூன்ரும்நாளில் ஹனுமான் இராவணனுக்கு உபதேசம் செய்யும் 51 ஸர்க்கம் முடியவும், நான்காவது நாளில் காண்டம் முடியும்வரையிலுமாக 48 நாட்களில் 12 ஆவர்த்தி பாராயணம் செய்யவேண்டும். அல்லது ஒவ்வொரு நாளிலும் ஏழேழு ஸர்க்கங்களாக பாராயணம் செய்து 68 நாட்களில் 7 ஆவர்த்தி பாராயணம் செய்துமுடிக்கலாம். அல்லது ஒவ்வொரு நாளிலும் எட்டு ஸர்க்கப்பிரகாரம் 17 நாட்களில் 2 ஆவர்த்தி பாராயணம் செய்து முடிக்கலாம். முன்சொன்ன எல்லா விதிகளிலும் பாராயணசமாப்தி தினத்தில் ஸ்ரீராமரது பட்டாபிஷேக (131 யுத்த) ஸர்க்கத்தை பாராயணம் செய்யவேண்டும். அவ்விதமே தன் சக்திக்கேற்ற படி உத்ஸவமும் நடத்தவேண்டியது. ஒவ்வொருநாளிலும் பாராணம் செய்வதற்கு முந்தியும், செய்தபிறகும் சர்க்கரையுடன் காய்ச்சின பாலும், தாம்பூலமும், பழங்களும் ஸ்ரீராமருக்கு நிவேதனம் செய்யவேண்டும். கடைசி தினத்தில் தன் சக்தியை அனுசரித்து பிராமணசமாராதனம் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் இரண்டு பங்கு பலமுண்டாகும்.

முன்சொன்ன விதிப்பிரகாரம் எவன் செய்யச்சக்தியற்றவனே அவன் ஓர் ஆவர்த்தி ஸுந்தரகாண்டத்தை பக்தியுடன் பாராயணம் செய்யலாம். எவனொருவன் ஒருநாளில் விடியற்காலம் ஆரம்பித்து பிற்பகல் வரையில் உச்சஸ்வரத்தில் வ்யக்தமாகப் பாராயணம் செய்கிருனே அவனுடைய புண்யபலத்தைச் சொல்ல ஆதிசேஷனலும் முடியாது. அவ்விதமும் செய்யமுடியாதவன் இரண்டு நாட்களில் இஷ்டசித்திக்காக பாராயணம் செய்யலாம். அதில் முதல் நாள் அங்குலீய பிரதானத்திற்கு (36 ஸர்க்கம்) முந்தின ஸர்க்கம் முடிய பாராயணம் செய்து மறுநாள் காண்டத்தை முடிக்கவேண்டும். அதற்கும் பலமனந்தம். அல்லது முதல்நாளில் திரிஜடாஸ்வப்னம் (27 ஸர்க்கம்) முடிய பாராயணம் செய்து, இரண்டாம் நாளில் அசோகவனிகா பங்கம் வரையில் (40 ஸர்க்கம்) பாராயணம் செய்து, மூன்ரும்நாளில் காண்டத்தை பூர்த்திசெய்யவேண்டும்; இந்த விதியும் மிகச் சிறந்தது. இவ்விதம் மூன்று நாட்களில் பாராயணம் செய்தால் மஹத்தான பலமுண்டாகும். அல்லது முதல்நாள் ஸீதாதர்சனம் (15 ஸர்க்கம்) முடியவும், இரண்டாவதுநாள் திரிஜடை ஸ்வப்னம் சொல்வது (27 ஸர்க்கம்) முடியவும், மூன்ருவதுநாள் சூடாமணிப்பிரதானம் (38 ஸர்க்கம்) முடியவும், நான்காம்நாள் லங்காதஹனம் (54 ஸர்க்கம்) முடியவும், ஐந்தாம்நாள் காண்டத்தை முடிக்க வேண்டுமென்பது ஐந்துநாளில் பாராயணம் செய்யவேண்டிய விதி. அல்லது ஓர் வெள்ளிக்கிழமை தொடங்கி தினம் 9 ஸர்க்கப்பிரகாரம் பாராயணம் செய்து மறுபடி அடுத்த வெள்ளிக்கிழமை பாக்கி வந்ததான 5 ஸர்க்கங்களை பாராயணம்

செய்து பட்டாபிஷேகஸர்க்கத்தையும் பாராயணம் செய்யவேண்டுமென்பது தனத்தை விரும்புகிறவர்கள் 8 நாளில் செய்யவேண்டிய விதி. அல்லது முதல் நாள் 5, இரண்டாம்நாள் 10, மூன்ரும்நாள் 5, நான்காம் நாள் 6, ஐந்தாம்நாள் 7, ஆருவது நாள் 7, ஏழாவது நாள் 12, எட்டாவது நாள் 8, ஒன்பதாவது நாள் 8 ஸர்க்கங்கள் பாராயணம் செய்யவேண்டுமென்பது 9 நாளில் செய்யவேண்டிய மஹத்தான விதி. முதல்நாள் சர்க்கரை பொங்கலும், இரண்டாம்நாள் அப்பங்களும் பாயஸமும், மூன்ரும்நாள் எள்ளன்னமும், நான்காம்நாள் இரண்டு முறுக்குகளும், ஐந்தாம்நாள் தத்யன்னமும் (தயிர்ச்சாதம்), ஆருவதுநாள் கொழுக்கட்டைகளும், ஏழாவது நாள் அனேகவித பழங்களும், எட்டாவதுநாள் பருப்பும் அன்னமும், ஒன்பதாவதுநாள் சர்க்கரையுடன் கூடிய பாலும் நிவேதனம் செய்யவேண்டும். இந்த விரதத்தில் பிரவசனமும் செய்தால் மிக சிரேஷ்டமாக விருக்கும்.

ஹே பார்வதி! விரும்பியதை கொடுக்கக்கூடியதான வேருெரு விரதத்தைச் சொல்லுகிறேன்; கேள். ஒவ்வொரு நாளும் ஆறு ஸர்க்கங்களாக 11 நாட்கள் படித்து 12-வது நாளில் பாக்கிவந்த இரண்டு ஸர்க்கங்களையும், விபீஷணருக்கு அபயப்பிரதானம் செய்த (18, 19 யுத்த.) இரண்டு ஸர்க்கங்களையும், இந் இந்திரஜித்து வதம், கும்பகர்ணவதம், ராவணவதம் (67, 91, 111 யுத்த.) என்ற மூன்று ஸர்க்கங்களையும் ஸ்ரீராமபட்டாபிஷேக (131 யுத்த.) ஸர்க்கத்தையும் பக்தியுடன் படிக்கவேண்டும். இவ்விதம் 12 நாட்கள் இந்த உத்தமமான விரதத்தைச் செய்துகொண்டு ஸஹஸ்ரநாமங்களால் ஸ்ரீராமசந்திரனை பூஜிக்கவேண்டியது. இரவில் முதல் யாமத்தில் பிரவசனம் செய்தால் ஸ்ரீராமானுக்கிரஹத்தால் இந்த விரதம் பலவத்தாகும். அல்லது தினம் இரண்டு ஸர்க்கங்களாக இருபத்திரண்டு நாட்கள் படித்து இருபத்திமூன்ரும்நாள் ஐந்து ஸர்க்கங்களும், இருபத்திநான்காம்நாள் மூன்று ஸர்க்கங்களும், இருபத்தைந்தாம்நாள் ஆறு ஸர்க்கங்களும், இருபத்தாரும்நாள் மூன்று ஸர்க்கங்களும், இருபத்தேழாம்நாள் நான்கு ஸர்க்கங்களும், இருபத்தெட்டாம்நாள் மிகுதியுள்ள மூன்று ஸர்க்கங்களையும் படித்து, ராவணவதத்தையும் (111 யுத்த) படித்து சக்தியனுசரித்து ஸ்ரீராமபட்டாபிஷேகம் செய்யவேண்டியது. மேற்சொன்ன எல்லா முறைகளிலும் செய்ய சக்தியற்றவனுகில் எப்படியாவது ஸுந்தரகாண்டத்தைப் படித்து ஸ்ரீராமபட்டாபிஷேகத்தை செய்யவேண்டியது.

ஸம்ஸாரஸாகரத்தைக் கடக்க விரும்புகிறவன் மூன்றுருதுக்கள் (ஆறு மாதங்கள்) விடியற்காலத்தில் ஸுந்தரகாண்டத்தின் முதல் ஸர்க்கத்தை படிக்க வேண்டும். பூதம், வேதாளம், கூச்மாண்டம், பிசாசு முதலியவற்ருல் உண்டான உபத்திரவம் நீங்கவேண்டுமென்பவன் லங்காவிஜயம் என்ற (3) ஸர்க்கத்தைப் படிக்கவேண்டும். புத்திகுறைவு நீங்கவேண்டுமானுல் ஹனுமான் சிந்தை செய்யும் (13) ஸர்க்கத்தைப் படிக்கவேண்டும். பாஸ்திரீகமனதோஷசாந்திக்காக ஹனுமான் இராவணுந்தபுரத்தில் ஸீதாதேவியைத் தேடினதான (7, 8, 9, 10, 11) ஸர்க்கங்களை சுத்தனுகப் படிக்கவேண்டியது. ஹனுமான் சீதாதேவியைக் கண்டதான (15) ஸர்க்கத்தை ஒருவன் படிப்பானேயானுல் குபேரன்போல் பூமியில் தனவந்தனுக பவித்து சந்தோஷப்படுவான். துர்ஸ்வப்னத்தாலுண்டான தோஷநிவர்த்திக்காக திரிஜடாஸ்வப்னத்தை (27 ஸர்.) படிக்கவேண்டும். ஸத்வகுணபிவிருத்திக்காசைகொண்டவன் ஸீதாராவணஸம்வாதத்தை (20, 21) ஸ்ரீராமனிடத்தில் பாரத்தை வைத்து படிக்கவேண்டும். தன்னை விட்டுப்பிரிந்த பந்துக்களுடன் சேர ஆவல்கொண்டவன் ஸீதை, ஹனுமான் இவர்களுடைய ஸம்வாதரூபமான 33 முதல் 40 வரையிலுள்ள ஸர்க்கங்களைப் படிக்கவேண்டும்.

ஆபத்து நீங்கவேண்டுமானல் கணையாழி கொடுப்பதை (36) படிக்கவேண்டும். தெரிந்தோ, தெரியாமலோ ஸ்ரீராமருக்குச்செய்த பலவித அபராதங்களையும் க்ஷமிக்கவேண்டுமானல் காகாஸுரனுக்கு அனுக்கிரஹம் செய்த (38) ஸர்க்கத்தை படிக்கவேண்டும். ஆனந்தரூபமான பரப்பிரம்மஸ்வரூபத்தை அடைய வேண்டுமானல் ஹனுமானுக்கு சூடாமணியைக் கொடுத்த (38) ஸர்க்கத்தைப் படிக்கவேண்டும். சத்துருக்களை ஜயிக்கவேண்டுமானல் ஹனுமான் கிங்கராதிகளை வதம் செய்ததான 42 முதல் 47 வரையிலுள்ள ஸர்க்கங்களைப் படிக்கவேண்டும். தருமம் விருத்தியடைய விரும்பியவர்கள் ஹனுமான் இராவணனுக்குச் செய்த தர்மயுக்தமான ஸந்தேசத்தைப் (51) படிக்கவேண்டும். வீடு, தோப்பு முதலியவை விருத்தியாகவேண்டுமானல் லங்காதனகத்தை (54) படிக்கவேண்டியது. வானரங்கள் மதுவனத்தையழித்ததைப் (61) படித்தால் பசி, தாஹம் இவை இல்லாதவனுய் சாந்தனுக பிரம்மலோகத்தில் சுகமாக வசிப்பான். ஹனுமான் ஸ்ரீராமருக்கு ஸீதாஸந்தேசத்தைச் சொல்வதை (67) படித்தால் ஸ்ரீராமனிடமிருந்து புக்தியும் முக்தியும் அடைவான். அசோகவனிகாபங்கத்தைப் (41) படித்தால் நினைத்த காரியம் கைகூடும். ஸீதாவர்ணனஸர்க்கத்தைப் (19) படித்தால் ஆசைகளை யொழித்த ஒருவனுக்கு, ஸர்வம் பிரம்மயம் என்ற அறிவும் ஸம்ஸாரத்தில் நிந்தாபுத்தியும் உண்டாகும். அதிகம் சொல்லுவதெதற்கு ? ஹே பார்வதி ! ஒருவன் ஸுந்தரகாண்டத்தைப் படித்தால் அடையமுடியாத ஒன்று மேயில்லை. புத்திரனை இச்சித்தவன் ஏழு தடவை பாராயணத்தால் புத்திரனை அடைகிறுன். எட்டுநாட்களில் ஒரு தடவை பாராயணம் செய்பவன் நிதியை அடைவான். ஒன்பது நாட்களில் ஒரு தடவை பாராயணம் செய்தால் கன்னிகை தகுந்த கணவனை அடைவாள். முன்சொன்ன சகல விதிகளாலும் மோட்சம் வரையிலுமுள்ள பலத்தைக்கொடுக்கும் அளவற்ற ஸ்ரீராமப்பிரஸாதம் பூலோகத்தில் என்ன சுகத்தைத்தான் செய்யாது? ஒரு நாளில் ஒரு தடவை பாராயணம் செய்தால் பெரிய ஆபத்துகள் நீங்கும். எந்தெந்த பலத்தை மனதில் நினைத்து பாராயண விரதத்தைச் செய்கிறுன, அந்தந்த பலம் கையில் இருப்பதாகவே எண்ணலாம். சகலரோகங்களும், எல்லா பாபங்களும் நசிக்கின்றன. பாராயணம் செய்வதற்கு முன்பும் பின்பும் எவனெருவன் நிவேதனம் செய்யாதிருப்பானே, அவனுக்குண்டாகும் பலனை உண்டாகாமல் ஹனுமான் தடைசெய்கிறுர். ஸ்திரீகளும் சூத்திரர்களும் பிராமணனைக்கொண்டு படிக்கச்சொல்லிக் கேட்க வேண்டும். இந்த எல்லாவிதிகளிலும் ஸ்ரீராமனையும், ஸீதையையும், ஹனுமானையும் ஸஹஸ்ரநாமத்தால் பூஜிக்கவேண்டும். இந்த விரதம் உத்தமம். சக்தியற்றவன் அஷ்டோத்தர சதத்தாலர்ச்சிக்கவேண்டும். இந்த விரதம் மத்திமம். நன்ருக காய்ச்சினதும், இளஞ்சூடுள்ளதும், சர்க்கரையோடு கூடினதுமான பசுவின் பாலை ஸ்ரீராகவனுக்கு நிவேதனம் செய்யவேண்டும். இது எல்லாவற்றிற்கும் பிரதிவிதியாகும். ஸ்ரீராமனை பூஜிப்பதற்கு தாமரைப்பூக்களும் துளசியும் மிகச்சிறந்தவை. அவை இல்லாவிடில் கிடைத்த புஷ்பங்களால் ஸ்ரீராமனை பூஜிக்கலாம். கரவீர (அரளி) பூக்களால் ஒரு போதும் பூஜை செய்யக்கூடாது. தாழம்பூக்களால் அலங்காரம் மட்டும் செய்யலாம். மாதளம்பழத்தை நிவேதனம் செய்தால் அளவற்ற பலனுண்டாகும். விரதியானவன் ஆவாஹனத்திலும், விஸர்ஜனத்திலும், பூஜைக்கடைசியிலும், நமஸ்காரம் முதலியவற்றிலும் ராமகாயத்ரீமந்திரத்தை ஜபித்து ஸ்ரீராகவனை வசப்படுத்தவும். (दाशरथाय विद्महे सीतावल्लभाय धीमहि। तन्नो रामः प्रचोदयात् என்று ராமகாயத்ரீமந்திரம்.) பூஜையின் பூர்ண பலனை அடையவும், தெரிந்தோ தெரியாமலோ உள்ள பாபம் தீரவும், காயத்ரியையாவது रां रामाय नमः என்ற ஷடாக்ஷரியையாவது ராமகாயத்ரியையாவது ஜபிக்கவேண்டும். தசா

வரண யந்திரத்தில் ஸ்ரீராமபூஜை செய்வது உத்தமம். நவாவரணயந்திரத்தில் செய்வது மத்தியமம். (தசாவரணயந்திரத்தின் ஸ்வரூபம் பின்வருமாறு. மத்தியில் ஷட்கோணமும், அதைச்சுற்றி அஷ்டதளமும், அதையும் சுற்றி அஷ்டதளமும், அதைச்சுற்றி த்வாதசதளமும், அதைச்சுற்றி ஷோடசதளமும் அதைச் சுற்றி த்வாத்திரிம்சதளமும், பிறகு பூகிருஹத்ரயமும் இருக்கவேண்டும். இதில் முதல் அஷ்டதளத்தின் மத்தியும், அக்ரமும் ஒரே ஆவரணம். இந்த இரண்டு இயந்திரங்களின் பக்கத்தில் பாராயணம் செய்யும்பக்ஷத்தில் பிரதிமை செய்ய வேண்டுமென்று கட்டாயமில்லை. பிரதிமையையாவது யந்திரத்தையாவது செய்ய சக்தியில்லாதவன் ஸ்ரீராமாயணகிரந்தத்தில் ஸ்ரீராமனை பூஜை செய்யலாம் ஏனென்றால் அவ்விடத்தில்ஸ்ரீராமன் பரிவாரங்களுடன் எப்பொழுதும் இருக்கிறார். விரதத்தை அனுஷ்டிப்பவன் விரதகாலத்தில் பிரம்மசாரியாக இருக்கவேண்டும். யஜமானனும், வக்தாவும், கேட்போர்களும் ஸ்நானம் செய்து, சுத்தர்களாகவும் அசுத்தர்களோடு சேராமலும் இருக்கவேண்டும். ஹே பார்வதி! என்னால் சொல்லப்பட்ட ரஹஸ்யமான இந்த தத்வத்தை த்வாபரயுகத்தின் கடைசியில் நந்தி ஸனகாதிகளுக்குச் சொல்லுவான்; அவர்கள் நாரதருக்குச் சொல்லுவார்கள்; அவர் பூமியில் இதை விஸ்தாரம் செய்வார். என்னால் உனக்கு சொல்லப்பட்ட ஸுந்தரகாண்டத்தின் பாராயணகிரமத்தை படிக்கவாவது கேட்கவாவது எவன் செய்கிறானோ அவன் ஸ்ரீராமபக்தனாக பவித்து சகல ஸித்திகளையும் பெறுவான்.

ஸுந்தரகாண்டமாஹாத்ம்யம் ஸம்பூர்ணம்.

ஸப்தஸர்க்கபாராயணக்ரமம்
(பாராசர்யோபபுராணோக்தம்)

பரமேசுவரர் சொல்கிறார்:—ஆபத்துக்கள் நீங்க இச்சிப்பவனும், தனத்தை இச்சிப்பவனும் ஸ்ரீமத்ஸுந்தரகாண்டத்தை ஸப்தஸர்க்கபாராயணக்கிரமமாக படிக்கவேண்டும்.

பார்வதி சொல்கிறாள்:— பிரபுவே! மனிதன் ஸுந்தரகாண்டத்தின் ஸப்த (ஏழு) ஸர்க்கங்களை எவ்விதமாக பாராயணம் செய்யவேண்டும்? அதன் விதியை எனக்குச் சொல்லும். அதனால் நான் கிருதார்த்தையாக பவிப்பேன்.

பரமேசுவரர் சொல்கிறார் :— தர்மார்த்த காமங்களை இச்சிப்பவனும், ஆபத்து நீங்க இச்சிப்பவனுமான ஒருவன் ஸுந்தரகாண்டத்தை பாராயணம் செய்யவேண்டும். சகல தோஷசாந்திக்கும், அவ்விதமே துர்ஸ்வப்னம் நசிக்கவும், தோஷகரங்களான நவக்ரஹபீடைகளில்நின்றும், மாற்றமுடியாத ரோகங்

களில் நின்றும், வழிதெரியாத காட்டிலும், ஆயுதங்களாலும், திருடர்களாலும், அக்கினியாலுமுண்டாகும் கஷ்டங்களில் நின்றும், கோரங்களான ஸகல ஆபத்துக்களில் நின்றும் நிவர்த்திசெய்வதில் ஸுந்தரகாண்டத்தைக்காட்டிலும் சிறந்தது வேறொன்றுமேயில்லை. ஸ்ரீமத் ஸுந்தரகாண்டத்தின் ஸப்தஸர்க்க பாராயணத்தால் அடையமுடியாத மஹாராஜ்யத்தையும் அடையமுடியும். ஆயுளை இச்சிப்பவன் ஆயுளையும், தனத்தை இச்சிப்பவன் தனத்தையும், ஸ்ரீகாமன் ஸ்ரீயையும், பூமியை இச்சிப்பவன் பூமியையும், வித்தையை இச்சிப்பவன் வித்தையையும், ஸ்திரீயை இச்சிப்பவன் ஸ்திரீயையும், ஆரோக்கியத்தை இச்சிப்பவன் ஆரோக்கியத்தையும் ஸப்த ஸர்க்கபாராயணத்தால் அடைவான். ஒருவன் எப்பொழுதெல்லாம் ஸ்ரீராமாயணத்தை படிக்க விரும்புகிறானோ, அப்பொழுதெல்லாம் धर्मात्मा सत्यसन्धश्च रामो दाशरथिर्यदि । पौरुषे चाप्रतिद्वन्द्वः शरैनं जहि रावणिम् ॥ என்ற மூலமந்திரத்தை ஜபிக்கவேண்டும்.

ஸ்ரீராமரின் பாதாரவிந்தங்களை த்யானம்செய்துகொண்டு सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते । अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद्व्रतं मम ॥ என்ற மந்திரத்தை கடைசியிலும் ஜபிக்கவேண்டும். இந்த இரண்டு மந்திரங்களுடைய மாஹாத்மியத்தை ஸ்ரீராமனையும் ஹனுமானையும் தவிர யார்தான் அறிவார்? வித்வானான ஒருவன் நல்லநாளில் சுபநட்சத்திரத்தில் ஸங்கல்பம்செய்து விதிப்படி ஸுந்தரகாண்டத்தை ஸப்த (ஏழு) ஸர்க்கவிதிப்பிரகாரம் பாராயணம் செய்யவேண்டும். ஒவ்வொரு நாளிலும் நியமத்துடன் ஏழு ஸர்க்கங்கள்வீதம் காண்டம் முடியும் வரையிலும் திரும்பித்திரும்பி படிக்கவேண்டும். எந்ததினத்தில் ஏற்றத்தாழ்வில்லாமல் ஏழு ஸர்க்கங்களுடன் காண்டம் முடிகிறதோ அன்றுதான் பாராயணம் முடிகிறது. அன்று பிராமண போஜனம் செய்யவேண்டும். ஹே ப்ரியே! ஸுந்தரகாண்டத்தின் ஸர்க்கஸங்கியை எவ்வளவோ அவ்வளவு நாட்களைக்கொண்டு தான் பாராயணம் முடிகின்றது. (68 நாட்களில்தான் ஸுந்தரகாண்டஸப்தஸர்க்கபாராயணம் ஏழுதடவைமுடியும் என்றர்த்தம்). ஹே பார்வதி! முன்சொன்னபடி செய்தால் அது ஒருதடவை பாராயணம் செய்ததாகும். இவ்விதம் ஏழு தடவை பாராயணம்செய்தால் அதற்கு "மஹாஸப்தஸர்க்கபாராயணம்" என்று பெயர். அதன் முடிவில் ஸர்க்கக்கணக்கை அனுசரித்து பிராமணபோஜனம் செய்விக்கவேண்டும். இவ்விதம் படிக்கின்றவனும், படிக்கச்செய்கின்றவனும், ஆபத்துக்கள் நீங்கி சகலாபீஷ்டங்களையும் அடைகின்றான் என்பதில் சந்தேஹமில்லை. படிக்கச்செய்வதாயிருந்தால் ஒவ்வொரு பாராயணத்திற்கும் 7 நிஷ்கங்கள் (14 பணவிடை) தக்ஷிணையாக படிக்கிறவர்க்கு வஸ்திரம், மாலை, சந்தனம் இவைகளுடன் கொடுக்கவேண்டும். மஹாஸப்தஸர்க்கத்தின் பாராயணக் கடைசியில் ஆதரவுடன் 7 ஸுவர்ணங்கள் (22 பணவிடை 1 ஸுவர்ணம்) தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். ஹே தேவி! நீ எதைக் கேட்டயோ அதை உனக்குச் சொன்னேன். அதை நன்றாக தாரணை செய்துகொள். வேறு என்ன கேட்க விரும்புகின்றாய்?

ஸுந்தரகாண்டபாராயணக்ரமம்.

(அகஸ்த்தியஸம்ஹிதோக்தம்).

முன்பு வால்மீகியால் இயற்றப்பட்டதும், ஸீதையின் சமாசாரங்களை ஸ்ரீராமனுக்குக் கூறுவதுமான ஸுந்தரகாண்டத்தைக் கேட்டால், சந்தானத்தை இச்சிப்பவனும், தனத்தை இச்சிப்பவனும், சாம்ராஜ்யத்தை இச்சிப்பவனும், அரசன் கட்டிலிருந்து மோசனத்தை இச்சிப்பவனும், மோட்சத்தை இச்சிப்பவனும், ஸ்ரீ ஸீதாராமப்பிரஸாதத்தால் அந்தந்த பலன்களை அடைகிறார்கள். இருபத்தோரு தடவை பாராயணம் செய்தால் புத்திரசந்தானத்தை அடைவான். ஒருவன் ஒவ்வொரு நாளும் இருபத்தைந்து ஸர்க்கங்கள் பாராயணம் செய்தால் அதிகம் தனத்தையும், வீடு, தான்யம் முதலியவற்றையும் பெறுவான். ஒருவன் ஒரு வருஷம் முடிய தினம் ஒன்றுக்கு ஏழேழு ஸர்க்கங்களாக பாராயணம் செய்தால் பெரிய சாம்ராஜ்யத்தை அடைகிறான். அரசர்களால் பூஜிக்கவும் படுகிறான். ஒவ்வொரு நாளும் முப்பத்திநான்கு ஸர்க்கங்களாக 2 நாட்களில் காண்டத்தை முடிப்பது என்கிற கிரமத்தில் 34 ஆவர்த்தி பாராயணம் செய்தால் ராஜபந்தனத்தினின்று விடுபடுகிறான். சக்தியனுசரித்து உயிருடனிருக்கும்வரை பாராயணம் செய்யும் ஒருவன் இவ்வுலகில் சுகமனுபவித்து மோட்சத்தையுமடைகிறான். மழையில்லாதாகுங்காலங்களில் துர்பிக்ஷநிவர்த்திக்காக ஸுந்தரகாண்டத்தை படித்தால் நல்ல மழை பெய்யும். அனேக விதிகளைச் சொல்வதால் என்ன பயன்? இவ்வுலகில் சகலாபீஷ்டங்களையும்கொடுப்பது ஸுந்தரகாண்டபாராயணமே தவிர வேறொன்றுமே இல்லை. ஓர் பிராமணச்ரேஷ்டனிடமிருந்து இதைக்கேட்டு பிராமணஸந்தர்ப்பணைசெய்து, ஆசாரியனை பசு, பூமி, வஸ்திரம் முதலியவற்றால் பூஜிக்கவேண்டும்.

ஸுந்தரகாண்டசிரவணபலம்.

(தத்வசங்க்ரஹராமாயணோக்தம்).

ஓர் மனிதன் "ततो रावणनीतायाः सीतायाः शत्रुकर्शनः" என்ற ஸுந்தரகாண்டத்தின் முதல் சுலோகத்தைக் கேட்டால் கார்யசித்தியைஅடைகின்றான். ஸுந்தரகாண்டத்தின் முதல்ஸர்க்கத்திலிருக்கும் ஹனுமானுடைய பராக்கிரமாதிகளை கேட்டால் அபஸ்மாரம், குஷ்டம், பூதம், வேதாளம் இவற்றாலுண்டாகும் பீடைகள் நசிக்கும். "स निर्जित्य पुरीं श्रेष्ठाम्" என்ற சுலோகத்தின் முதலக்ஷரத்தைக் கேட்டால் ஸம்ஸாரபந்தத்திநின்று முக்தனாக பவித்து ப்ரம்மத்வத்தை அடைகிறான். ஸீதாதர்சனத்தைக் கேட்டு துக்கம் நீங்கினவனாக பவிக்கிறான். திரிஜடாஸ்வப்னத்தைக் கேட்டால் துர்ஸ்வப்னம் இல்லாதாகும். எவர்கள் ஸ்ரீராமரது கணையாழிகொடுப்பதைக் கேட்கிறார்களோ, அவர்கள் யுத்தத்தில் சத்துருக்

களை ஜயித்து, அழிவில்லாத ராஜ்யத்தை அடைகிறார்கள். ''धन्या देवाः सगन्धर्वाः' (26 ஸர். 41 சுலோ) என்ற சுலோகத்தின் முதலக்ஷரத்தையும், பதினைன்காவது அக்ஷரத்தையும் கேட்டால் வாயுவைப்போல் அஸங்கனாக சஞ்ரிப்பான். ஹனுமத்க்ரஹணத்தைக் கேட்டால் பந்தனத்திலிருந்து விடப்பட்டவனாவான். லங்காதஹனத்தைக் கேட்டால் தாபத்ரயங்களும் நசிக்கும். ''मङ्गलाभिमुखी'' (53 ஸர். 26 சுலோ.) என்ற சுலோகத்தில் காயத்திரியின் பதினைந்தாவது அக்ஷரமான, ''म'' என்ற முதலாவது அக்ஷரத்தை கேட்டால் எனது ரூபத்தை அடைவான். ஹனுமானின் விஜயத்தோடுகூடின ஐந்தாவது காண்டமான ஸுந்தர காண்டத்தை கேட்கும் ஒருவன் ஹனுமதனுக்கிரஹத்தால் பிர்ம்மலோகத்தை அடைவான்.

ஸுந்தரகாண்டமாஹாத்மியம்

(ஸ்காந்தோபபுராணோக்தம்)

ஒருவன் ஸுந்தரகாண்டத்தை படிப்பதால், பெற எளியதாயினும் பெற அரியதாயினும் மனதில் நினைத்ததைப்பெறவும், சத்துருக்களிடமிருந்து விடுதலை பெறவும் சிறைவாஸத்திலிருந்துவிடுதலைபெறவும் கூடும். ''பிரதிதினமும்ஸுந்தர காண்டத்தின் ஏழேழு சர்க்கங்களை ஓர் மனிதன் ஸ்ரீராமனை மனதால் தியானம் செய்து, நமஸ்கரித்து, பக்தியுடன் படிப்பானேயானால், என்றுமுள்ள விஷ்ணுவான ஸ்ரீராமர் பிரஸன்னராகி, அவனுடைய பலநூறு ஜன்மாக்களில் ஸஞ்சிதமான பாபங்களை நாசஞ்செய்கிறார். இப்படியிருக்க மனதில் எண்ணிய காரியசித்தியைக்குறித்துச் சொல்லவேண்டுமோ?'' என்று நாங்கள் அடிக்கடி ஆலோசனை செய்கிறோம்.

—:✻✻:—

॥ ॐ ॥

॥ अथ स्मार्तानां श्रीरामायणपठनोपक्रमेऽनुसन्धेयाः श्लोकाः ॥

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् । प्रसन्नवदनं ध्यायेत्सर्वविघ्नोपशान्तये ॥ १ ॥
वागीशाद्याः सुमनसः सर्वार्थानामुपक्रमे । यं नत्वा कृतकृत्याः स्युस्तं नमामि गजाननम् ॥

दोर्भिर्युक्ता चतुर्भिः स्फटिकमणिमयीमक्षमालां दधाना
हस्तेनैकेन पद्मं सितमपि च शुकं पुस्तकं चापरेण ।
भासा कुन्देन्दुशङ्खस्फटिकमणिनिभा भासमानाऽसमाना
सा मे वाग्देवतेयं निवसतु वदने सर्वदा सुप्रसन्ना ॥ ३ ॥

कूजन्तं राम रामेति मधुरं मधुराक्षरम् । आरुह्य कविताशाखां वन्दे वाल्मीकिकोकिलम् ॥
वाल्मीकेर्मुनिसिंहस्य कवितावनचारिणः । शृण्वन् रामकथानादं को न याति परां गतिम् ॥
यः पिबन् सततं रामचरितामृतसागरम् । अतृप्तस्तं मुनिं वन्दे प्राचेतसमकल्मषम् ॥ ६ ॥
गोष्पदीकृतवाराशिं मशकीकृतराक्षसम् । रामायणमहामालारत्नं वन्देऽनिलात्मजम् ॥७॥
अञ्जनानन्दनं वीरं जानकीशोकनाशनम् । कपीशमक्षहन्तारं वन्दे लङ्काभयङ्करम् ॥ ८ ॥

उल्लङ्घ्य सिन्धोः सलिलं सलीलं यः शोकवह्निं जनकात्मजायाः ।
आदाय तेनैव ददाह लङ्कां नमामि तं प्राञ्जलिराञ्जनेयम् ॥ ९ ॥

आञ्जनेयमतिपाटलाननं काञ्चनाद्रिकमनीयविग्रहम् ।
पारिजाततरुमूलवासिनं भावयामि पवमाननन्दनम् ॥ १० ॥

यत्र यत्र रघुनाथकीर्तनं तत्र तत्र कृतमस्तकाञ्जलिम् ।
बाष्पवारिपरिपूर्णलोचनं मारुतिं नमत राक्षसान्तकम् ॥ ११ ॥

मनोजवं मारुततुल्यवेगं जितेन्द्रियं बुद्धिमतां वरिष्ठम् ।
वातात्मजं वानरयूथमुख्यं श्रीरामदूतं शिरसा नमामि ॥ १२ ॥

यः कर्णाञ्जलिसंपुटैरहरहः सम्यक् पिबत्यादरात्
वाल्मीकेर्वदनारविन्दगलितं रामायणाख्यं मधु ।
जन्मव्याधिजराविपत्तिमरणैरत्यन्तसोपद्रवं
संसारं स विहाय गच्छति पुमान्विष्णोः पदं शाश्वतम् ॥ १३ ॥

तदुपगतसमाससन्धियोगं सममधुरोपनतार्थवाक्यबद्धम् ।
रघुवरचरितं मुनिप्रणीतं दशशिरसश्च वधं निशामयध्वम् ॥ १४ ॥

वाल्मीकिगिरिसंभूता रामसागरगामिनी। पुनातु भुवनं पुण्या रामायणमहानदी॥ १५॥
श्लोकसारजलाकीर्णं सर्गकल्लोलसङ्कुलम्। काण्डग्राहमहामीनं वन्दे रामायणार्णवम्॥
वेदवेद्ये परे पुंसि जाते दशरथात्मजे। वेदः प्राचेतसादासीत्साक्षाद्रामायणात्मना॥१७॥
वैदेहीसहितं सुरद्रुमतले हैमे महामण्डपे
मध्ये पुष्पकमासने मणिमये वीरासने सुस्थितम्।
अग्रे वाचयति प्रभञ्जनसुते तत्त्वं मुनिभ्यः परं
व्याख्यान्तं भरतादिभिः परिवृतं रामं भजे श्यामलम्॥ १८॥
वामे भूमिसुता पुरश्च हनुमान् पश्चात्सुमित्रासुतः
शत्रुघ्नो भरतश्च पार्श्वदलयोर्वाय्वादिकोणेषु च॥
सुग्रीवश्च विभीषणश्च युवराट् तारासुतो जाम्बवान्
मध्ये नीलसरोजकोमलरुचिं रामं भजे श्यामलम्॥ १९॥
नमोऽस्तु रामाय सलक्ष्मणाय देव्यै च तस्यै जनकात्मजायै।
नमोऽस्तु रुद्रेन्द्रयमानिलेभ्यो नमोऽस्तु चन्द्रार्कमरुद्गणेभ्यः॥ २०॥

॥ पारायणसमापनसमये अनुसन्धेयश्लोकक्रमः॥

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं लोकाः समस्ताः सुखिनो भवन्तु॥ १॥
काले वर्षतु पर्जन्यः पृथिवी सस्यशालिनी। देशोऽयं क्षोभरहितो ब्राह्मणास्सन्तु निर्भयाः॥
अपुत्राः पुत्रिणः सन्तु पुत्रिणः सन्तु पौत्रिणः।
अधनाः सधनाः सन्तु जीवन्तु शरदां शतम्॥ ३॥
चरितं रघुनाथस्य शतकोटिप्रविस्तरम्। एकैकमक्षरं प्रोक्तं महापातकनाशनम्॥ ४॥
शृण्वन् रामायणं भक्त्या यः पादं पदमेव वा। स याति ब्रह्मणः स्थानं ब्रह्मणा पूज्यते सदा॥
रामाय रामभद्राय रामचन्द्राय वेधसे। रघुनाथाय नाथाय सीतायाः पतये नमः॥ ६॥
यन्मङ्गलं सहस्राक्षे सर्वदेवनमस्कृते। वृत्रनाशे समभवत्तत्ते भवतु मङ्गलम्॥ ७॥
यन्मङ्गलं सुपर्णस्य विनताऽकल्पयत्पुरा। अमृतं प्रार्थयानस्य तत्ते भवतु मङ्गलम्॥ ८॥
अमृतोत्पादने दैत्यान् घ्नतो वज्रधरस्य यत्। अदितिर्मङ्गलं प्रादात्तत्ते भवतु मङ्गलम्॥
त्रीन्विक्रमान् प्रक्रमतो विष्णोरमिततेजसः। यदासीन्मङ्गलं राम तत्ते भवतु मङ्गलम्॥
ऋतवः सागरा द्वीपा वेदा लोका दिशश्च ते। मङ्गलानि महाबाहो दिशन्तु तव सर्वदा॥
कायेन वाचा मनसेन्द्रियैर्वा बुध्याऽऽत्मना वा प्रकृतेः स्वभावात्।
करोमि यद्यत्सकलं परस्मै नारायणायेति समर्पयामि॥ १२॥

कूजन्तं राम रामेति मधुरं मधुराक्षरम् । आरुह्य कविताशाखां वन्दे वाल्मीकिकोकिलम् ॥
वाल्मीकेर्मुनिसिंहस्य कवितावनचारिणः । शृण्वन् रामकथानादं को न याति परां गतिम् ॥
यः पिबन् सततं रामचरितामृतसागरम् । अतृप्तस्तं मुनिं वन्दे प्राचेतसमकल्मषम् ॥ ३ ॥
गोष्पदीकृतवाराशिं मशकीकृतराक्षसम् । रामायणमहामालारत्नं वन्देऽनिलात्मजम् ॥४॥
अञ्जनानन्दनं वीरं जानकीशोकनाशनम् । कपीशमक्षहन्तारं वन्दे लङ्काभयङ्करम् ॥ ५ ॥

मनोजवं मारुततुल्यवेगं जितेन्द्रियं बुद्धिमतां वरिष्ठम् ।
वातात्मजं वानरयूथमुख्यं श्रीरामदूतं शिरसा नमामि ॥ ६ ॥
उल्लङ्घ्य सिन्धोः सलिलं सलीलं यः शोकवह्निं जनकात्मजायाः ।
आदाय तेनैव ददाह लङ्कां नमामि तं प्राञ्जलिराञ्जनेयम् ॥ ७ ॥
आञ्जनेयमतिपाटलाननं काञ्चनाद्रिकमनीयविग्रहम् ।
पारिजाततरुमूलवासिनं भावयामि पवमाननन्दनम् ॥ ८ ॥
यत्र यत्र रघुनाथकीर्तनं तत्र तत्र कृतमस्तकाञ्जलिम् ।
बाष्पवारिपरिपूर्णलोचनं मारुतिं नमत राक्षसान्तकम् ॥ ९ ॥

वेदवेद्ये परे पुंसि जाते दशरथात्मजे । वेदः प्राचेतसादासीत्साक्षाद्रामायणात्मना ॥१०॥

तदुपगतसमाससन्धियोगं सममधुरोपनतार्थवाक्यबद्धम् ।
रघुवरचरितं मुनिप्रणीतं दशशिरसश्च वधं निशामयध्वम् ॥ ११ ॥
श्रीराघवं दशरथात्मजमप्रमेयं सीतापतिं रघुकुलान्वयरत्नदीपम् ।
आजानुबाहुमरविन्ददलायताक्षं रामं निशाचरविनाशकरं नमामि ॥ १२ ॥
वैदेहीसहितं सुरद्रुमतले हैमे महामण्डपे
मध्येपुष्पकमासने मणिमये वीरासने सुस्थितम् ।
अग्रे वाचयति प्रभञ्जनसुते तत्त्वं मुनिभ्यः परं
व्याख्यान्तं भरतादिभिः परिवृतं रामं भजे श्यामलम् ॥ १३ ॥

॥ पारायणसमापनक्रमः ॥

एवमेतत्पुरावृत्तमाख्यानं भद्रमस्तु वः । प्रव्याहरत विस्रब्धं बलं विष्णोः प्रवर्धताम् ॥
लाभस्तेषां जयस्तेषां कुतस्तेषां पराभवः । येषामिन्दीवरश्यामो हृदये सुप्रतिष्ठितः ॥ २ ॥
काले वर्षतु पर्जन्यः पृथिवी सस्यशालिनी । देशोऽयं क्षोभरहितो ब्राह्मणास्सन्तु निर्भयाः ॥
कावेरी वर्धतां काले काले वर्षतु वासवः । श्रीरङ्गनाथो जयतु श्रीरङ्गश्रीश्च वर्धताम् ॥४॥

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं लोकाः समस्ताः सुखिनो भवन्तु ॥ ५ ॥
मङ्गलं कोसलेन्द्राय महनीयगुणाब्धये । चक्रवर्तितनूजाय सार्वभौमाय मङ्गलम् ॥ ६ ॥
वेदवेदान्तवेद्याय मेघश्यामलमूर्तये । पुंसां मोहनरूपाय पुण्यश्लोकाय मङ्गलम् ॥ ७ ॥
विश्वामित्रान्तरङ्गाय मिथिलानगरीपतेः । भाग्यानां परिपाकाय भव्यरूपाय मङ्गलम् ॥
पितृभक्ताय सततं भ्रातृभिः सह सीतया । नन्दिताखिललोकाय रामभद्राय मङ्गलम् ॥
त्यक्तसाकेतवासाय चित्रकूटविहारिणे । सेव्याय सर्वयमिनां धीरोदाराय मङ्गलम् ॥ १० ॥
सौमित्रिणा च जानक्या चापबाणासिधारिणे । संसेव्याय सदा भक्त्या स्वामिने मम मङ्गलम्
दण्डकारण्यवासाय खण्डितामरशत्रवे । गृध्रराजाय भक्ताय मुक्तिदायास्तु मङ्गलम् ॥
सादरं शबरीदत्तफलमूलाभिलाषिणे । सौलभ्यपरिपूर्णाय सत्त्वोद्रिक्ताय मङ्गलम् ॥ १३ ॥
हनुमत्समेताय हरिशाभीष्टदायिने । वालिप्रमथनायास्तु महाधीराय मङ्गलम् ॥ १४ ॥
श्रीमते रघुवीराय सेतूल्लङ्घितसिन्धवे । जितराक्षसराजाय रणधीराय मङ्गलम् ॥ १५ ॥
आसाद्य नगरीं दिव्यामभिषिक्ताय सीतया । राजाधिराजराजाय रामभद्राय मङ्गलम् ॥
मङ्गलाशासनपरैर्मदाचार्यपुरोगमैः । सर्वैश्च पूर्वैराचार्यैः सत्कृतायास्तु मङ्गलम् ॥ १७ ॥

॥ अथ माध्वानां रामायणपठनोपक्रमेऽनुसन्धेयाः श्लोकाः ॥

शुक्लांबरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् । प्रसन्नवदनं ध्यायेत्सर्वविघ्नोपशान्तये ॥ १ ॥
लक्ष्मीनारायणं वन्दे तद्भक्तप्रवरो हि यः । श्रीमदानन्दतीर्थाख्यो गुरुस्तं च नमाम्यहम् ॥
वेदे रामायणे चैव पुराणे भारते तथा । आदावन्ते च मध्ये च विष्णुः सर्वत्र गीयते ॥
सर्वविघ्नप्रशमनं सर्वसिद्धिकरं परम् । सर्वजीवप्रणेतारं वन्दे विजयदं हरिम् ॥ ४ ॥
सर्वाभीष्टप्रदं रामं सर्वारिष्टनिवारकम् जानकीजानिमनिशं वन्दे मद्गुरुवन्दितम् ॥ ५ ॥
अभ्रमं भङ्गरहितमजडं विमलं सदा । आनन्दतीर्थमतुलं भजे तापत्रयापहम् ॥ ६ ॥
भवति यदनुभावादेडमूकोऽपि वाग्मी जडमतिरपि जन्तुर्जायते प्राज्ञमौलिः ॥
सकलवचनचेतोदेवता भारती सा मम वचसि विधत्तां सन्निधिं मानसे च ॥
मिथ्यासिद्धान्तदुर्ध्वान्तविध्वंसनविचक्षणः । जयतीर्थाख्यतरणिर्भासतां नो हृदम्बरे ॥
चित्रैः पदैश्च गम्भीरैर्वाक्यैर्मानैरखण्डितैः । गुरुभावं व्यञ्जयन्ती भाति श्रीजयतीर्थवाक् ॥
कूजन्तं राम रामेति मधुरं मधुराक्षरम् । आरुह्य कविताशाखां वन्दे वाल्मीकिकोकिलम् ॥
वाल्मीकेर्मुनिसिंहस्य कवितावनचारिणः । शृण्वन् रामकथानादं को न याति परां गतिम् ॥
यः पिबन् सततं रामचरितामृतसागरम् । अतृप्तस्तं मुनिं वन्दे प्राचेतसमकल्मषम् ॥१२॥

गोष्पदीकृतवाराशिं मशकीकृतराक्षसम् । रामायणमहामालारत्नं वन्देऽनिलात्मजम् ॥
अञ्जनानन्दनं वीरं जानकीशोकनाशनम् । कपीशमक्षहन्तारं वन्दे लङ्काभयङ्करम् ॥

मनोजवं मारुततुल्यवेगं जितेन्द्रियं बुद्धिमतां वरिष्ठम् ।
वातात्मजंवा नरयूथमुख्यं श्रीरामदूतं शिरसा नमामि ॥ १५ ॥

उल्लङ्घ्यसिन्धोस्सलिलं सलीलं यः शोकवह्निं जनकात्मजायाः ।
आदाय तेनैव ददाह लङ्कां नमामि तं प्राञ्जलिराञ्जनेयम् ॥ १६ ॥

आञ्जनेयमतिपाटलाननं काञ्चनाद्रिकमनीयविग्रहम् ।
पारिजाततरुमूलवासिनं भावयामि पवमाननन्दनम् ॥ १७ ॥

यत्र यत्र रघुनाथकीर्तनं तत्र तत्र कृतमस्तकाञ्जलिम् ।
बाष्पवारिपरिपूर्णलोचनं मारुतिं नमत राक्षसान्तकम् ॥ १८ ॥

वेदवेद्ये परे पुंसि जाते दशरथात्मजे । वेदः प्राचेतसादासीत्साक्षाद्रामायणात्मना ॥
आपदामपहर्तारं दातारं सर्वसम्पदाम् । लोकाभिरामं श्रीरामं भूयो भूयो नमाम्यहम् ॥

तदुपगतसमाससन्धियोगं सममधुरोपनतार्थवाक्यबद्धम् ।
रघुवरचरितं मुनिप्रणीतं दशशिरसश्च वधं निशामयध्वम् ॥ ३१ ॥

वैदेहीसहितं सुरद्रुमतले हैमे महामण्डपे
मध्ये पुष्पकमासने मणिमये वीरासने सुस्थितम् ।
अग्रे वाचयति प्रभञ्जनसुते तत्त्वं मुनिभ्यः परं
व्याख्यान्तं भरतादिभिः परिवृतं रामं भजे श्यामलम् ॥ २२ ॥

वन्दे वन्द्यं विधिभवमहेन्द्रादिबृन्दारकेन्द्रैः
व्यक्तं व्याप्तं स्वगुणगणतो देशतः कालतश्च ।
धूतावद्यं सुखजितिमयैर्मङ्गलैर्युक्तमङ्गैः
सानाथ्यं नो विदधदधिकं ब्रह्म नारायणाख्यम् ॥ २३ ॥

भूषारत्नं भुवनवलयस्याखिलाश्चर्यरत्नं
लीलारत्नं जलधिदुहितुर्देवतामौलिरत्नम् ।
चिन्तारत्नं जगति भजतां सत्सरोजद्युरत्नं
कौसल्याया लसतु मम हृन्मण्डले पुत्ररत्नम् ॥ २४ ॥

महाव्याकरणाम्भोधिमन्थमानसमन्दरम् । कवयन्तं रामकीर्त्या हनुमन्तमुपास्महे । २५ ॥

मुख्यप्राणाय भीमाय नमो यस्य भुजान्तरम् । नानावीरसुवर्णानां निकषाश्मायितं बभौ ॥
स्वान्तस्थानन्तशय्याय पूर्णज्ञानमहार्णसे । उत्तुङ्गवाक्तरङ्गाय मध्वदुग्धाब्धये नमः ॥
वाल्मीकेर्गौः पुनीयान्नो महीधरपदाश्रया । यद्दुग्धमुपजीवन्ति कवयस्तर्णका इव ॥२८॥
सूक्तिरत्नाकरे रम्ये मूलरामायणार्णवे । विहरन्तो महीयांसः प्रीयन्तां गुरवो मम ॥२९॥
हयग्रीव हयग्रीव हयग्रीवेति यो वदेत् । तस्य निःसरते वाणी जह्नुकन्याप्रवाहवत् ॥३०॥

॥ पारायणसमापनक्रमः ॥

स्वस्ति प्रजाभ्यां परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः
गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं लोकाः समस्ताः सुखिनो भवन्तु ॥ १ ॥
काले वर्षतु पर्जन्यः पृथिवी सस्यशालिनी । देशोऽयं क्षोभरहितो ब्राह्मणास्सन्तु निर्भयाः ॥
लाभस्तेषां जयस्तेषां कुतस्तेषां पराभवः । येषामिन्दीवरश्यामो हृदये सुप्रतिष्ठितः ॥ ३ ॥
मङ्गलं कोसलेन्द्राय महनीयगुणाब्धये । चक्रवर्तितनूजाय सार्वभौमाय मङ्गलम् ॥ ४ ॥

॥ इत्यादिश्लोकाः श्रीवैष्णवपद्धतिवदनुसन्धेयाः ॥

राघवो विजयं दद्यात्
मम सीतापतिः प्रभुः ।

राघवस्य पदद्वन्द्वं
दद्यादमितवैभवम् ।

कटपङ्क्याविधानेन पठ काण्डन्तु सुन्दरम् ॥

रा	2	म	5	रा	2	द	8
घ	4	म	5	घ	4	द्या	1
वो	4	सी	7	व	4	द	8
वि	4	ता	6	स्य	1	मि	5
ज	8	प	1	प	1	त	6
यं	1	तिः	6	द	8	वै	4
द	8	प्र	2	द्वं	4	भ	4
द्यात्	1	भुः	4	द्वं	4	वम्	4
8	32	8	36	8	28	8	40

நெம்பர்.	மொத்தம்பாராயணம் செய்யும் தடவைகள்.	மொத்தம் வேண்டிய நாட்கள்	ஒவ்வொருநாளும் பாராயணம் செய்யவேண்டிய ஸர்க்கங்களின் தொகை.	பலன்.
1	68	73 அல்லது 74	தினம் 68 ஸர்க்கங்கள் வீதம் 68 தினங்கள்; பிறகு யுத்தகாண்டம் முழுதும் 5 அல்லது 6 நாட்கள்	எல்லா நோய்களும் தீருதல், ஆயுள், புத்திர மித்திரர்களுடனிருக்கும் விரோத நாசம், கடன்தீருதல், அபமிருத்யு சாந்தி, சத்ருஜயம், சந்தானமடைதல், ஸர்வஸித்தி,
2	32	64	முதல்நாள் 38 (1 முதல் 38 சேர்ந்து) 2-வதுநாள் 30 (39 முதல் 68 சேர்ந்து) இந்த முறையில் 64 நாட்கள் 64-ாவதுநாள் யுத்தகாண்டம் 131-ாவது ஸர்க்கம் சேர்ந்து	
3	24	72	1-ாவதுநாள் 15 (1 முதல் 15 சேர்ந்து) 2-ாவதுநாள் 26 (16 முதல் 41 சேர்ந்து) 3-ாவதுநாள் 27 (42 முதல் 68 சேர்ந்து) இந்த முறையில் 72 நாட்கள் 72-ாவதுநாள் யுத்தகாண்டம் 131-வது ஸர்க்கம்	
4	12	48	1-ாவது நாள் 15 (1 முதல் 15 சேர்ந்து) 2-ாவதுநாள் 17 (16 முதல் 32 சேர்ந்து) 3-ாவதுநாள் 19 (33 முதல் 51 சேர்ந்து) 4-ாவதுநாள் 17 (52 முதல் 68 சேர்ந்து) இந்த முறையில் 48 நாட்கள் 48-ாவதுநாள் யுத்தகாண்டம் 131-ாவது ஸர்க்கம் சேர்ந்து	

சுந்தரகாண்டபாராயணமுறைகள்.

5	7	68	நாள் ஒன்றுக்கு 7 ஸர்க்கம் வீதம் 68 நாட்கள். 68-ாவதுநாளில் கடைசி 7 ஸர்க்கமும், யுத்தகாண்டம் 131-ாவது ஸர்க்கமும்	ராஜ்யம், ஆயுள், தனம், வித்தை, ஸ்திரீ, ஆரோக்கியம், சம்பத்து.
6	4	28	நாள் ஒன்றுக்கு 10 ஸர்க்கங்கள் வீதம் 27 நாட்கள்; 28-ாவதுநாள் கடைசி 2 ஸர்க்கங்கள்+யுத்த. 131	
7	2	17	நாள் ஒன்றுக்கு 8 ஸர்க்கங்கள் வீதம் 17 நாட்கள். 17-ாவதுநாள் யுத்த. 131	
8	1	1	68 ஸர்க்கங்கள்+யுத்த. 131	பெரிய ஆபத்து நீங்குதல்.
9	1	2	1-ாவதுநாள் 35 ஸர்க்கங்கள் 2-ாவதுநாள் 33+யுத்த. 131	
10	1	3	1-ாவது நாள் 27 (1 முதல் 27 சேர்ந்து) 2-ாவதுநாள் 13 (28 முதல் 40 சேர்ந்து) 3-ாவதுநாள் 28 (41 முதல் 68 சேர்ந்து) +யுத்த. 131	
11	1	5	1-ாவதுநாள் 15 (1 முதல் 15 சேர்ந்து) 2-ாவதுநாள் 12 (16 — 27 ,, 3-ாவதுநாள் 11 (28 — 38 ,, 4-ாவதுநாள் 16 (39 — 54 ,, 5-ாவதுநாள் 14 (55 — 68 ,,யுத்த.131	
12	1	8	ஒரு வெள்ளிக்கிழமை ஆரம்பித்து தினம் 9 ஸர்க்கங்கள் வீதம் 8-ாவதுநாளில் கடைசி 5 ஸர்.+யுத்த 131	ஐசுவரியம்.
13	1	9	முறையே 5, 10, 5, 6, 7, 7, 12, 8, 8+ யுத்த. 131	கன்னிகைக்கு வரன் கிடைத்தல்.
14	1	12	தினம் 6 ஸர்க்கங்கள் வீதம் 11 நாட்கள் 12-ாவதுநாள், கடைசி 2 ஸர். +யுத்தகாண்டம் 18,19,67,91,111+131 ஸர்க்கங்கள்	
15	1	28	தினம் 2 ஸர்க்கங்கள் வீதம் 22 நாட்கள் 23-ாவதுநாள் 5 24-ாவதுநாள்-3 26-ாவதுநாள்-3 25-ாவதுநாள்-6 27-ாவதுநாள்-4 28-ாவதுநாள்-3+யுத்த. 111, 131	
16	21	21	தினம் 1-க்கு 68 வீதம் 21-ாவதுநாள் யுத்த. 131-ம் சேர்ந்து	புத்திரலாபம்.
17	25	68	தினம் 1-க்கு 25 வீதம்; 68-ாவதுநாள் யுத்த. 131-ம் சேர்ந்து	அதிக தனம்.
18	34	68	தினம் 1-க்கு 34 வீதம்; 68-ாவதுநாள் யுத்த. 131-ம் சேர்ந்து	அரசபந்தன விமோசனம்.



ॐ

॥ श्रीगुरुभ्यो नमः ॥

श्रीसीतालक्ष्मणभरतशत्रुघ्नहनुमत्समेतश्रीरामचन्द्रस्वामिने नमः

॥ श्रीमद्वाल्मीकिरामायणम् ॥

सुन्दरकाण्डम्



[पुरा कुशलवाभ्यां श्रीरामसन्निधावश्वमेधयज्ञवाटे द्वाविंशति दिनेषु गीते श्रीमद्रामायणे षोडशेऽह्नि किष्किन्धाकाण्डे एकपंचाशत्तमसर्गमारभ्य यावत्काण्डसमाप्ति, सुन्दरकाण्डे आदितः सर्गत्रयं च गीतम् । तस्मिन् दिने गीताः श्लोकाश्च ७९८ ॥]

ஆதியில் குசன் லவன் இவர்களால் ஸ்ரீராமர் ஸந்நிதியில் அச்வமேதயாக சாலையில் முப்பத்திரண்டு தினங்களில் கானம் செய்யப்பட்ட ஸ்ரீமத் ராமாயணத்தில் 16ஆம் நாள் கிஷ்கிந்தாகாண்டம் 51-வது ஸர்க்கம் முதல் அந்த காண்டம் முடியவும் ஸுந்தர காண்டத்தில் முதல் மூன்று ஸர்க்கங்களும் கானம் பண்ணப் பட்டன. அன்று கானம் செய்யப்பட்ட சுலோக ஸங்க்யை 798.

प्रथमः सर्गः—முதல் ஸர்க்கம் ॥ १ ॥

हनूमतः समुद्रतरणम्—ஆஞ்சனேயர் ஸமுத்திரத்தைத் தாண்டுதல்.

ततो रावणनीतायाः सीतायाः शत्रुकर्शनः । इयेष पदमन्वेष्टुं चारणाचरिते पथि ॥ १ ॥

ततः	பிறகு	रावणनीतायाः	ராவணனால் (திருடிக்) கொண்டுபோகப்பட்ட
शत्रुकर्शनः	சத்துருக்களின் உருவழிக்கும் அவர்	सीतायाः	ஸீதையின்
चारणाचरिते	சாரணரென்னும் தேவர்கள் ஸஞ்சரிக்	पदम्	இருப்பிடத்தை
		अन्वेष्टुं	தேட
पथि	மார்க்கத்தில் [கிற	इयेष	அவா கொண்டார்.

दुष्करं निष्प्रतिद्वन्द्वं चिकीर्षन् कर्म वानरः । समुदग्रशिरोग्रीवो गवां पतिरिवाबभौ ॥ २ ॥

वानरः	வானரர்	चिकीर्षन्	செய்யவிரும்பியவராய்
निष्प्रतिद्वन्द्वं	ஒப்பற்றதும்	समुदग्रशिरोग्रीवः	தலையையும் கழுத்தையும் உயர்த்தியவராய்
दुष्करं	மற்றெவரும் செய்ய முடியாததுமான	गवां पतिः इव	ஆணெருதுபோல்
कर्म	காரியத்தை	आबभौ	விளங்கினார்.

अथ वैडूर्यवर्णेषु शाद्वलेषु महाबलः। धीरः सलिलकल्पेषु विचचार यथासुखम् ॥ ३ ॥
द्विजान् वित्रासयन् धीमानुरसा पादपान् हरन्। मृगांश्च सुबहून्निघ्नन् प्रवृद्ध इव केसरी ॥

अथ	பிறகு	वैडूर्यवर्णेषु	வைடூர்யநிறமுடையதான
महाबलः	மஹாபலவானும்	सलिलकल्पेषु	குளிர்ந்த நீரையொத்த
धीरः	தீரனும்	शाद्वलेषु	பசும்புற்றரைகளில்
धीमान्	புத்திமானுமான ஹநுமார்	सुबहून्	அநேக
द्विजान्	பறவைகளை	मृगान्	மிருகங்களை
वित्रासयन्	பயமுறுத்தியும்,	निघ्नन् च	கொன்றுகொண்டும்
पादपान्	மரங்களை	प्रवृद्धः	மிக கொழுத்திருக்கிற
उरसा	மார்பினுல்	केसरी इव	சிங்கம் போல்
हरन्	சாய்த்தும்	यथासुखं	இஷ்டப்படி
		विचचार	உலாவினுர்.

नीललोहितमाञ्जिष्ठपद्मवर्णैः सितासितैः। स्वभावविहितैश्चित्रैर्धातुभिः समलंकृतम् ॥ ५ ॥

स्वभावविहितैः	இயற்கையாய் அமைந்துள்ள	सितासितैः	வெளுப்பு, கறுப்பு களோடும்
नीललोहित-माञ्जिष्ठपद्मवर्णैः	நீலம், சிவப்பு, மஞ்சள், பத்மவர்ணம் இந்த வர்ணங்களோடும்	चित्रैः	விசித்திரங்களான
		धातुभिः	காவிக்கற்களாலும்
		समलंकृतं	அலங்கரிக்கப்பட்டு விளங்குவது.

कामरूपिभिराविष्टमभीक्ष्णं सपरिच्छदैः। यक्षकिन्नरगन्धर्वैर्देवकल्पैश्च पन्नगैः ॥ ६ ॥

कामरूपिभिः	வேண்டிய ரூபமெடுக்க வல்ல	देवकल्पैः	தேவர்களையொத்த
यक्षकिन्नरगन्धर्वैः	இயக்கர், கின்னரர், கந்தர்வர்கள் இவர்களாலும்	सपरिच्छदैः	பரிவாரங்களோடுகூடிய
		पन्नगैः च	பன்னகர்களாலும்
		अभीक्ष्णं	இடைவிடாது
		आविष्टम्	நிறைந்துள்ளது.

सेव्यमाने गिरिश्रेष्ठे बहुनागवरायुते। तिष्ठन् कपिवरस्तत्र ह्रदे नाग इवाबभौ ॥ ७ ॥

तत्र	அந்த	तिष्ठन्	நிற்கும்
बहुनागवरायुते	அநேக சிறந்த யானைகளால் நிறைந்துள்ள	कपिवरः	வானரோத்தமர்,
		ह्रदे	மடுவில்
सेव्यमाने	பூஜார்ஹமான	नागः इव	யானைபோல்
गिरिश्रेष्ठे	கிரிச்ரேஷ்டத்தில்	आबभौ	விளங்கினுர்.

स सूर्याय महेन्द्राय पवनाय स्वयंभुवे। भूतेभ्यश्चाञ्जलिं कृत्वा चकार गमने मतिम् ॥
अञ्जलिं प्राङ्मुखः कुर्वन् पवनायात्मयोनये। मनसाऽऽवन्द्य रामाय लक्ष्मणाय महाहरिः ॥
सरितः सागरांश्चापि प्रणम्य शिरसा हरिः। ज्ञातींस्तान् संपरिष्वज्य कृत्वा चापि प्रदक्षिणम् ॥

सः	அந்த
हरिः	கபிலவர்ணரான
महाहरिः	வானரோத்தமர்
सूर्याय	சூர்யபகவானுக்கும்
महेन्द्राय	இந்திரனுக்கும்
पवनाय	வாயுபகவானுக்கும்
स्वयंभुवे	பிரம்மனுக்கும்
भूतेभ्यः	அடியார்களுக்கும்
अञ्जलिं कृत्वा	அஞ்சலிசெய்து,
च	அதன்பின்னர்
प्राङ्मुखः	கிழக்குமுகமாய் இருப்பவராய்
आत्मयोनये	தனது தந்தையான
पवनाय	வாயுபகவானுக்கு
अञ्जलिं	அஞ்சலி
कुर्वन्	செய்துகொண்டு
रामाय	ஸ்ரீராமருக்கும்
लक्ष्मणाय	ஸ்ரீலக்ஷ்மணருக்கும்
मनसा	மனதால்
आवन्द्य	நமஸ்கரித்து
अपि	பின்னர்
सरितः	நதிகளையும்
सागरान् च	ஸமுத்திரங்களையும்
शिरसा	தலையால்
प्रणम्य	வணங்கி
अपि	பின்னர்
ज्ञातीन्	ஞாதிகளை
संपरिष्वज्य	கட்டியணைத்து
च	அதோடு
तान्	அவர்களை
प्रदक्षिणम्	ப்ரதக்ஷிணம்
कृत्वा	செய்து
गमने	புறப்படுவதில்
मतिं चकार	புத்தியைச்செலுத்தினார்.

अतिष्ठन्मार्गमावृत्य पुण्यं वायुनिषेवितम्। पुनरागमनायेति वानरैरभिपूजितः ॥ ११ ॥

पुनः आगमनाय	க்ஷேமமாய் திரும்பி வருவதின் பொருட்டு
इति वानरैः	என்று வானரர்களால்
अभिपूजितः	ஆசீர்வதிக்கப் பட்டவராய்
पुण्यं	பரிசுத்தமானதும்
वायुनिषेवितं	வாயுஸஞ்சரிப்பதுமான
मार्गं	இடத்தை
आवृत्य	நோக்கி
अतिष्ठत्	நின்றார்.

इहैव तिष्ठतेत्युक्त्वा प्रदक्षिणमथाकरोत्। ततो हि ववृधे गन्तुं दक्षिणो दक्षिणां दिशम् ॥

दक्षिणः	நாகரிகமுடைய அவர்
इह एव	"இங்கேயே
तिष्ठत	இருங்கள்"
इति उक्त्वा	என்று சொல்லி
अथ	பின்னர்
प्रदक्षिणं	பிரதிக்ஷிணத்தை
अकरोत्	செய்தார்;
दक्षिणां	தெற்கு
दिशं	திக்கை நோக்கி
गन्तुं हि	போகவும்
ततः	அங்கு
ववृधे	வளர்ந்தார்.

प्लवङ्गप्रवरैर्दृष्टः प्लवने कृतनिश्चयः। ववृधे रामवृद्ध्यर्थं समुद्र इव पर्वसु ॥ १३ ॥

प्लवङ्गप्रवरैः	வானரச்ரேஷ்டர்களால்
दृष्टः	பார்த்துக்கொண்டிருக் கப்பட்டவராய்
प्लवने	தாண்டுவதில்
कृतनिश्चयः	திடமாக மனதைச் செலுத்தியவராய்
पर्वसु	பர்வதினங்களில்
समुद्रः	ஸமுத்திரம்
इव	போல்
रामवृद्ध्यर्थं	ஸ்ரீராமகார்யஸித்திக் காக
ववृधे	உயர்ந்தோங்கினார்.

निष्प्रमाणशरीरः सन् लिलङ्घयिषुरर्णवम् । प्रगृह्य बलवान् बाहू लङ्कामभिमुखः स्थितः ।
बाहुभ्यां पीडयामास चरणाभ्याञ्च पर्वतम् ॥ १४ ॥

बलवान्	பலவானான அவர்
बाहू	முன்னங்கால்களிரண்டையும்
प्रगृह्य	முன் நீட்டிவைத்து
लङ्कां	லங்கையை
अभिमुखः	நோக்கியவராய்
स्थितः	நின்றுகொண்டு
अर्णवं	ஸமுத்திரத்தை
लिलङ्घयिषुः	தாண்ட விரும்பியவராய்
निष्प्रमाण-शरीरः सन्	அளவிலடங்காத சரீரத்தையுடையவராய்
चरणाभ्यां	பின்னங்கால்களிரண்டாலும்
बाहुभ्यां च	முன்னங்கால்களிரண்[டாலும்
पर्वतं	மலையை
पीडयामास	ஊன்றியமுக்கினார்.

स चचालाचलश्चापि मुहूर्तं कपिपीडितः । तरूणां पुष्पिताग्राणां सर्वं पुष्पमशातयत् ॥१५॥

कपिपीडितः	வானரரால் ஊன்றி அமுக்கப்பட்ட
सः च	அதுவும்
अचलः अपि	மலையாயிருந்தும்
मुहूर्तं	ஒரு முஹூர்த்தகாலம்
चचाल	அசைந்தது.
पुष्पिताग्राणां	பூங்கொத்துக்களை[யுடைய
तरूणां	மரங்களின்
सर्वं पुष्पं	புஷ்பமெல்லாவற்றை[யும்
अशातयत्	உதிரச்செய்தது.

तेन पादपमुक्तेन पुष्पौघेण सुगन्धिना । सर्वतः संवृतः शैलो बभौ पुष्पमयो यथा ॥

पादपमुक्तेन	மரங்களிலிருந்து [விழுந்த
तेन	அந்த
सुगन्धिना	நறிய மணமுள்ள
पुष्पौघेण	மலர்க்குவியல்களால்
सर्वतः	இடைவெளியில்லாமல்
संवृतः शैलः	மூடுண்ட மலை
पुष्पमयः यथा	புஷ்பமயமாய்
बभौ	விளங்கிற்று.

पीड्यमानस्तु बलिना महेन्द्रस्तेन पर्वतः । सलिलं संप्रसुस्राव मदमत्त इव द्विपः ॥१७॥

बलिना	பலவானான
तेन	அவரால்
पीड्यमानः	ஊன்றப்பட்ட
महेन्द्रः	மஹேந்திர
पर्वतः तु	மலையும்
मदमत्तः	மதித்துக்கொழுத்த
द्विपः	யானை
इव	போல்
सलिलं	நீரை
संप्रसुस्राव	பெருக்கிற்று.

तेन चोत्तमवीर्येण पीड्यमानः स पर्वतः । रीतीर्निर्वर्तयामास काञ्चनाञ्जनराजतीः ॥१८॥

उत्तमवीर्येण	சிறந்த வீரமுடைய
तेन	அவரால்
पीड्यमानः	ஊன்றப்பட்ட
सः	அந்த
पर्वतः च	மலையும்
काञ्चनाञ्जन-राजतीः	ஸுவர்ணம், மை, வெள்ளி இவைகளின்
रीतीः	ரேகைகளை
निर्वर्तयामास	(பிளவுகளில்) தெரியச்செய்தது.

मुमोच च शिलाः शैलो विशालाः समनःशिलाः । मध्यमेनार्चिषा जुष्टो धूमराजीरिवानलः ॥

च	மேலும்	अर्चिषा	அக்னிஜ்வாலையோடு
शैलः	மலை	जुष्टः	கலந்து கிளம்புகிற
समनःशिलाः	மனோசிலையுடன் கூடிய	अनलः	நெருப்பு
विशालाः	அகன்ற	धूमराजीः	புகைப்படலங்களை
शिलाः	கற்பாறைகளை	इव	போல்
मध्यमेन	நடுத்தரமான	मुमोच	வீழ்ந்தது.

हरिणा पीड्यमानेन पीड्यमानानि सर्वशः । गुहाविष्टानि भूतानि विनेदुर्विकृतैः स्वरैः ॥

हरिणा	வானரரால்	पीड्यमानानि	நெருக்குண்டவைக ளாய்
पीड्यमानेन	நெருக்குண்டதால்		
गुहाविष्टानि	குகைகளில் புகுந்தி [ருந்த	विकृतैः	பரிதாபமான
भूतानि	விலங்குகள்	स्वरैः	குரல்களால்
सर्वशः	நாலாபக்கங்களிலும்	विनेदुः	அலறின.

स महासत्त्वसन्नादः शैलपीडानिमित्तजः । पृथिवीं पूरयामास दिशश्चोपवनानि च ॥२१॥

शैलपीडा-निमित्तजः	மலையைப் பீடித்த காரணத்தினலுண்டான	पृथिवीं	பூமியையும்
सः	அந்த [கூக்குரல்	दिशः च	திக்குகளையும்
		उपवनानि च	சோலைகளையும்
महासत्त्वसन्नादः	பெரிய பிராணிகளின்	पूरयामास	நிறைத்தொலித்தது.

शिरोभिः पृथुभिः सर्पा व्यक्तस्वस्तिकलक्षणैः । वमन्तः पावकं घोरं ददंशुर्दशनैः शिलाः ॥

सर्पाः	பாம்புகள்	घोरं	கொடிய
अलमस्मात् परित्रातुं राघवाद्राक्षसीगणम् । अभियाचाम वैदेहीमेतद्धि मम रोचते ॥ ८६ ॥

अस्मात्	"' இந்த	वैदेहीं	வைதேஹியை
राघवात्	ஸ்ரீராகவரிடத்தினின்று	अभियाचाम	வேண்டிக்கொள்வோம்
राक्षसीगणं	ராக்ஷஸிகளின் கூட்	एतत् हि	இதுவேதான்
अलं	குறையின்றி [டத்தை	मम रोचते	எனக்கு நன்றெனத் தோன்றுகிறது.
परित्रातुं	காப்பாற்றுவதற்கு		

यस्या ह्येवंविधः स्वप्नो दुःखितायाः प्रदृश्यते । सा दुःखैर्बहुधा मुक्ता सुखमाप्नोत्यनुत्तमम् ॥

दुःखितायाः	"' மிகுந்த துயரத்துடனிருக்கிற	सा हि	அவளே
		दुःखैः	துக்கங்களால்
यस्याः	எவள் விஷயத்தில்	मुक्ता	விடப்பட்டவளாய்
एवंविधः	இவ்விதமான	अनुत्तमं सुखं	மேலான ஸுகத்தை
स्वप्नः	கனவு	बहुधा	பற்பலவிதமாய்
प्रदृश्यते	காணப்படுகிறதோ	आप्नोति	அடையப்போகின்ருள்.

प्रणिपातप्रसन्ना हि मैथिली जनकात्मजा ॥ ८८ ॥

जनकात्मजा	"' ஜனகர் திருமக	प्रणिपातप्रसन्ना	பணிந்த மாத்திரத்தில் பிரஸன்னையாவாள்.
मैथिली	மைதிலி [ளான	हि	ஸந்தேஹமில்லை.'

ततः सा ह्रीमती बाला भर्तुर्विजयहर्षिता । अवोचद्यदि तत्तथ्यं भवेयं शरणं हि वः ॥

ततः	" அப்பொழுது	तत्	'அது
ह्रीमती	நாணமுடைய	तथ्यं यदि	உண்மையானல்
सा बाला	அந்த நங்கை	वः हि	உங்களுக்கும்
भर्तुः	நாயகரின்	शरणं	அடைக்கலமாய்
विजयहर्षिता	ஜயத்தைப்பற்றி ஆனந்தமடைந்தவளாய்	भवेयं	ஆகக்கடவேன்' (என்று)
		अवोचत्	சொன்னுள்.

तां चाहं तादृशीं दृष्ट्वा सीताया दारुणां दशाम् । चिन्तयामास विक्रान्तो न च मे निर्वृतं मनः ॥

सीतायाः	" ஸீதையினுடைய	तां	அவளைப்பற்றி
तादृशीं	அப்படிப்பட்ட	चिन्तयामास	மனத்திற்குள்ளேயே யோசிக்கலானேன்.
दारुणां दशां च	கொடிய நிலையையும்		
दृष्ट्वा	கண்டு	च	அப்படியிருந்தும்
अहं विक्रान्तः	நான் பொறுத்துப் பார்த்தவனுய்	मे मनः	என் மனம்
		न निर्वृतम्	தரிக்கவில்லை.

संभाषणार्थं च मया जानक्याश्चिन्तितो विधिः । इक्ष्वाकूणां हि वंशस्तु ततो मम पुरस्कृतः ॥

जानक्याः	" ஜானகிக்கும்	तु	இது விஷயத்தில்
मम च	எனக்கும்	इक्ष्वाकूणां	இக்ஷ்வாகுக்களின்
संभाषणार्थं	ஸம்பாஷணை உண்டா	वंशः हि	வம்சபரம்பரையே
विधिः	ஓர் உபாயம் [வதற்கு	मया	என்னல்
चिन्तितः	தோன்றிற்று.	पुरस्कृतः	வெளியிட்டுப் புகழ்ந்துரைக்கப்பட்டது
ततः	அதனல்		

श्रुत्वा तु गदितां वाचं राजर्षिगणपूजिताम्। प्रत्यभाषत मां देवी बाष्पैः पिहितलोचना॥

देवी	" தேவியானவள்	बाष्पैः	கண்ணீரால்
गदितां	(என்னால்) கூறப்பட்ட	पिहितलोचना	மூடிய கண்களையுடைய
राजर्षिगणपूजितां	ராஜரிஷிகளின் வம்ச		வளாய்
	பரம்பரையைப் பற்றி	मां प्रति	என்னைப்பார்த்து
वाचं	சொல்லை [யதான	तु	இப்படி
श्रुत्वा	கேட்டு,	अभाषत	ஸம்பாஷணைசெய்தாள்.

कस्त्वं केन कथञ्चेह प्राप्तो वानरपुङ्गव। का च रामेण ते प्रीतिस्तन्मे शंसितुमर्हसि॥९३॥
तस्यास्तद्वचनं श्रुत्वा ह्यहमप्यब्रवं वचः॥ ९४॥

वानरपुङ्गव	" ' வானரோத்தம !	तत्	அதை
त्वं कः	நீ யார் ?	मे	எனக்கு
केन	எக்காரணத்தினால்	शंसितुं	விளங்கச்சொல்லுவ
कथं हि	எப்படித்தான்	अर्हसि	தயை புரியும்.' [தற்கு
इह	இங்கு	तस्याः	அவளுடைய
प्राप्तः	வந்தீர் ?	तत् वचनं	அம்மொழியை
रामेण	ஸ்ரீராமருடன்	श्रुत्वा	கேட்டு
ते च	தமக்கும்	अहं अपि	நானும்
प्रीतिः च	சினேகமுண்டென்பது	वचः	உத்திரவை (இப்படி)
का	எப்படி ? [தான்	अब्रवम्	அறிவித்தேன்.

देवि रामस्य भर्तुस्ते सहायो भीमविक्रमः। सुग्रीवो नाम विक्रान्तो वानरेन्द्रो महाबलः॥

देवि	" ' அம்மா !	सहायः	தோழராயிருக்கிறார் ;
ते	உமது	महाबलः	மஹாபலிஷ்டர்,
भर्तुः	பர்த்தாவான	भीमविक्रमः	மஹத்தான பராக்கிரம
रामस्य	ஸ்ரீராமருக்கு		முடையவர்,
सुग्रीवः	ஸுக்ரீவர்	विक्रान्तः	போர்வீரர்,
नाम	என்றவர்	वानरेन्द्रः	வானரர்கள்கோன்.

तस्य मां विद्धि भृत्यं त्वं हनुमन्तमिहागतम्। भर्त्राऽहं प्रेषितस्तुभ्यं रामेणाक्लिष्टकर्मणा॥

इह	" ' இங்கு	अक्लिष्टकर्मणा	காரியங்களைக் குறை
आगतं	வந்துசேர்ந்த		வின்றி முடிக்கவல்ல
मां	என்னை	भर्त्रा	பர்த்தாவான
तस्य	அவருடைய	रामेण	ஸ்ரீராமரால்
भृत्यं	மந்திரியான	अहं	நான்
हनुमन्तं	ஹனுமான் என்பவனாய்	तुभ्यं	உமக்காக
त्वं	நீர்	प्रेषितः	தூதாய்ச் செல்ல
विद्धि	திருவுளம் பற்றுவீராக.		விடுவிக்கப்பட்டேன்.

इदञ्च पुरुषव्याघ्रः श्रीमान्दाशरथिः स्वयम्। अङ्गुलीयमभिज्ञानमदात्तुभ्यं यशस्विनि ॥

यशस्विनि	"'புகழுடையீர்!
पुरुषव्याघ्रः	புருஷோத்தமரான
श्रीमान्	ஸ்ரீமானான
दाशरथिः च	தாசரதியும்
स्वयं	தாமே
तुभ्यं	உமக்கு
अभिज्ञानं	ஓர் அடையாளமாக
इदं	இந்த
अङ्गुलीयं	கணையாழியை
अदात्	கொடுத்தனுப்பினார்.

तदिच्छामि त्वयाऽऽज्ञप्तं देवि किं करवाण्यहम्।
रामलक्ष्मणयोः पार्श्वं नयामि त्वां किमुत्तरम्॥ ९८ ॥

तत्	"'ஆகையால்
देवि	அம்மா!
त्वया	உம்மால்
आज्ञप्तं	விடுவிக்கப்படும் நியமனத்தை
इच्छामि	பிரார்த்திக்கிறேன்.
अहं	நான்
किं करवाणि	யாது செய்யட்டும்?
रामलक्ष्मणयोः	ஸ்ரீராமலக்ஷ்மணர்களின்
पार्श्वं	இடத்திற்கு
त्वां	உம்மை
नयामि	கொண்டுபோய் விடுகிறேன்;
उत्तरं	ஸ்ரீமுகம்
किम्	என்ன?'

एतच्छ्रुत्वा विदित्वा च सीता जनकनन्दिनी। आह रावणमुत्साद्य राघवो मां नयत्विति॥

जनकनन्दिनी	"ஜனகர் திருமகளான
सीता	ஸீதை
एतत् श्रुत्वा	இதைக் கேட்டு,
विदित्वा	உள்ளதை உள்ளபடி அறிந்துகொண்டு
राघवः च	'ஸ்ரீராகவரே
रावणं	ராவணனை
उत्साद्य	ஒழித்து
मां	என்னை
नयतु	அழைத்துக்கொண்டு போகட்டும்'
इति	என்று
आह	விடைகொடுத்தாள்.

प्रणम्य शिरसा देवीमहमार्यामनिन्दिताम्। राघवस्य मनोह्लादमभिज्ञानमयाचिषम्॥

आर्यां	"உத்தமகுலத்தில் தோன்றியவளாய்
अनिन्दितां	அபகீர்த்திக்கிடமாகாதவளாயிருக்கும்
देवीं	தேவியை
अहं	நான்
शिरसा	தலையால்
प्रणम्य	வணங்கி நமஸ்கரித்து
राघवस्य	ஸ்ரீராகவருடைய
मनोह्लादं	சிந்தைக்கிசைந்த
अभिज्ञानं	ஓர் அடையாளத்தை
अयाचिषं	தரவேண்டுமென்று வேண்டிக்கொண்டேன்.

अथ मामब्रवीत्सीता गृह्यतामयमुत्तमः। मणिर्येन महाबाहू रामस्त्वां बहुमन्यते॥१०१॥

अथ	"அப்பொழுது
सीता	ஸீதை
मां	என்னைப் பார்த்து
येन	'எதனால்
महाबाहुः	மஹாபாஹுவான
रामः	ஸ்ரீராமர்
त्वां	உம்மை
बहुमन्यते	மிகக்கொண்டாடுவாரோ
अयं	அந்த இந்த
उत्तमः	உத்தமமான
मणिः	மணி
गृह्यतां	பெற்றுக்கொள்ளப்படட்டும்'
अब्रवीत्	(என்று) சொன்னாள்.

इत्युक्त्वा तु वरारोहा मणिप्रवरमद्भुतम् । प्रायच्छत् परमोद्विग्ना वाचा मां सन्दिदेश ह ॥

वरारोहा	"உத்தமி	ह	ஹா!
इति	இப்படி	परमोद्विग्ना	மிகக் கவலைகொண்டவளாய்
उक्त्वा	சொல்லிவிட்டு	वाचा तु	வாய்மொழிகொண்டும்
अद्भुतं	அத்புதமான	मां	என்னை
मणिप्रवरं	மணிரத்தினத்தை	सन्दिदेश	செய்திசொல்ல
प्रायच्छत्	தந்தருளினாள்.		ஆக்ஞாபித்தாள்.

ततस्तस्यै प्रणम्याहं राजपुत्र्यै समाहितः । प्रदक्षिणं परिक्राममिहाभ्युद्गतमानसः ॥ १०३ ॥

ततः	"அதன்பின்னர்	तस्यै	அந்த
अहं	நான்	राजपुत्र्यै	ராஜபுத்திரிக்கு
समाहितः	காரியஸித்தி பெற்றவனாய்	प्रणम्य	தண்டனிட்டு
इह	இவ்விடம்	प्रदक्षिणं	பிரதக்ஷிணத்தை
अभ्युद्गतमानसः	திரும்பிவந்து சேர உத்தேசங்கொண்டவனாய்	परिक्रामं	பண்ணினேன்.

उत्तरं पुनरेवेदं निश्चित्य मनसा तया । हनुमन् मम वृत्तान्तं वक्तुमर्हसि राघवे ॥१०४॥

तया	"அவளால்	हनुमन्	'ஹனுமாரே!
मनसा	மனதினால்	मम	எனது
निश्चित्य	ஆராய்ந்து ஆலோசித்து,	वृत्तान्तं	விருத்தாந்தத்தை
पुनः	இன்னும்	राघवे	ஸ்ரீராகவரிடத்தில்
इदं एव	பின்வருவதும்	वक्तुं	அறிவிக்க
उत्तरं	முடிவாயுரைக்கப்பட்டது.	अर्हसि	தயை புரியும்.

यथा श्रुत्वैव न चिरात्तावुभौ रामलक्ष्मणौ । सुग्रीवसहितौ वीरावुपेयातां तथा कुरु ॥

वीरौ	" 'வீரர்களான	यथा	எப்படியானால்
तौ	அந்த	श्रुत्वा एव	கேட்டவுடனே
रामलक्ष्मणौ	ஸ்ரீராமலக்ஷ்மணர்கள்	न चिरात्	தாமதியாமல்
उभौ	இருவரும்	उपेयातां	வந்து சேருவார்களோ
सुग्रीवसहितौ	ஸுக்ரீவரோடுகூடியவர்களாய்	तथा	அப்படி
		कुरु	செய்யும்.

यद्यन्यथा भवेदेतद् द्वौ मासौ जीवितं मम । न मां द्रक्ष्यति काकुत्स्थो म्रिये साऽहमनाथवत्॥

मम	" 'எனக்கு	सा	அந்த
जीवितं	உயிரிருக்குங்காலம்	अहं	நான்
मासौ	மாதங்கள்	अनाथवत्	அனாதையாக
द्वौ	இரண்டு;	म्रिये	உயிரை இழப்பேன்.
एतत्	இது	काकुत्स्थः	காகுத்ஸ்தர்
अन्यथा	நல்லதாகாததாய்	मां	என்னை
भवेत् यदि	முடியுமாயின்	न द्रक्ष्यति	காணமுடியாது.'

तच्छ्रुत्वा करुणं वाक्यं क्रोधो मामभ्यवर्तत । उत्तरं च मया दृष्टं कार्यशेषमनन्तरम् ॥

करुणं	“மனதை உருகச்செய்யும்	अभ्यवर्तत	வந்துவிட்டது;
तत्	அந்த	मया	என்னால்
वाक्यं श्रुत्वा	வாக்கியத்தைக்கேட்டு	उत्तरं	மேலே
अनन्तरं	உடனே	कार्यशेषं च	செய்யவேண்டும் காரியமும்
मां	எனக்கு		
क्रोधः	கோபம்	दृष्टं	நிச்சயிக்கப்பட்டது.

ततोऽवर्धत मे कायस्तदा पर्वतसन्निभः । युद्धकाङ्क्षी वनं तच्च विनाशयितुमारभे ॥

ततः	“அதனால்	युद्धकाङ्क्षी च	யுத்தத்திற்காக இழுப்பவனாயே
मे	எனது		
कायः	சரீரம்	तत्	அந்த
पर्वतसन्निभः	மலைக்கு நிகராக	वनं	வனத்தை
अवर्धत	வளர்ந்தது.	विनाशयितुं	அழிப்பதற்கு
तदा	அப்பொழுது	आरभे	சுறுசுறுப்புற்றேன்.

तद्भग्नं वनषण्डन्तु भ्रान्तत्रस्तमृगद्विजम् । प्रतिबुद्धा निरीक्षन्ते राक्षस्यो विकृताननाः ॥

विकृताननाः	“விகாரமான முகங்களுடைய	वनषण्डं	வனத்தொகுதியை
राक्षस्यः	அரக்கிகள்	भ्रान्तत्रस्त-मृगद्विजं	மிரண்டோடிப்போன மிருகங்களையும்பறவைகளையுமுடையதாய்
तु	இப்பொழுது		
प्रतिबुद्धाः	உறக்கத்திலிருந்து விழித்துக்கொண்டவர்களாய்	भग्नं	உருவழிந்ததாய்
तत्	அந்த	निरीक्षन्ते	ஏறிட்டுப்பார்த்தார்கள்.

मां च दृष्ट्वा वने तस्मिन् समागम्य ततस्ततः । ताः समभ्यागताः क्षिप्रं रावणायाचचक्षिरे ॥

ताः	“அவர்கள்	समभ्यागताः	ஸமீபம் வந்து சேர்ந்தவர்களாய்
तस्मिन्	அந்த		
वने	வனத்தில்	मां च	என்னையும்
ततस्ततः	அங்கங்கிருந்து	दृष्ट्वा	கண்டு
समागम्य	கும்பல் கூடி	रावणाय	ராவணனுக்கு
क्षिप्रं	உடனே	आचचक्षिरे	தெரிவித்தார்கள்.

राजन् वनमिदं दुर्गं तव भग्नं दुरात्मना । वानरेण ह्यविज्ञाय तव वीर्यं महाबल ॥१११॥

महाबल	“‘மஹாபலிஷ்டரான	अविज्ञाय हि	இத்தன்மையதென அறியாமையால்
राजन्	மன்னனே!		
दुरात्मना	துஷ்ட	दुर्गं	ஒருவரும் புகமுடியாத
वानरेण	வானரமொன்றால்	इदं	இந்த
तव	உமது	तव वनं	உமதுவனம்
वीर्यं	வீர்யத்தை	भग्नं	நாசமடைந்தது.

दुर्बुद्धेस्तस्य राजेन्द्र तव विप्रियकारिणः । वधमाज्ञापय क्षिप्रं यथाऽसौ विलयं व्रजेत् ॥

राजेन्द्र	“ ‘ஓ ராஜேந்திரா !
असौ विलयं	இது நாசமுறுவதை
व्रजेत्	பெறவேண்டும்;
यथा	அப்படியிருப்பதால்
तव	உமக்கு
विप्रियकारिणः	அபகாரம் செய்த
दुर्बुद्धेः	மதிகெட்ட
तस्य	அதற்கு
वधं	கொலைத்தண்டனையை
क्षिप्रं आज्ञापय	உடனே ஆணைசெய்யும்.’

तच्छ्रुत्वा राक्षसेन्द्रेण विसृष्टा भृशदुर्जयाः । राक्षसाः किङ्करा नाम रावणस्य मनोऽनुगाः ॥

तत् श्रुत्वा	“அதைக் கேட்டு
रावणस्य	ராவணனுடைய
मनोऽनुगाः	மனம்போல் நடப்பவர்களும்
भृशदुर्जयाः	வெல்லுதற்கரியவர்களுமான
किङ्कराः	கிங்கரர்கள்
नाम	என்னும்
राक्षसाः	ராக்ஷஸர்கள்
राक्षसेन्द्रेण	ராக்ஷஸேந்திரனால்
विसृष्टाः	ஏவிவிடப்பட்டு வந்து சேர்ந்தார்கள்.

तेषामशीतिसाहस्रं शूलमुद्गरपाणिनाम् । मया तस्मिन् वनोद्देशे परिघेण निषूदितम् ॥

शूलमुद्गरपाणिनां	“சூலமும் சம்மட்டியும் கையிற்கொண்ட
तेषां	அவர்களின்
अशीतिसाहस्रं	எண்பதினாயிரம்
तस्मिन्	அந்த [பேர்வழிகள்
वनोद्देशे	வனத்தின் ஓரிடத்தில்
परिघेण	ஓர் இருப்புலக்கையைக் [கொண்டு
मया	என்னால்
निषूदितम्	அடித்துக் கொல்லப்பட்டார்கள்.

तेषां तु हतशेषा ये ते गत्वा लघुविक्रमाः । निहतञ्च महत् सैन्यं रावणायाचचक्षिरे ॥

तेषां	“அவர்களில்
तु	அப்பொழுது
हतशेषाः	சாவாமல் தப்பிப் பிழைத்தவர்கள்
ये	எவர்களோ
ते	அவர்கள்
लघुविक्रमाः	விரைந்தோடுபவர்க [ளாய்
गत्वा	சென்று
महत् सैन्यं च	பெரும் சேனையையும்
निहतं	மடிந்ததை
रावणाय	ராவணனுக்கு
आचचक्षिरे	அறிவித்தார்கள்.

ततो मे बुद्धिरुत्पन्ना चैत्यप्रासादमाक्रमम् । तत्रस्थान् राक्षसान् हत्वा शतं स्तंभेन वै पुनः ॥
ललामभूतो लङ्कायाः स वै विध्वंसितो मया ॥ ११६ ॥

मे	“எனக்கு
पुनः बुद्धिः	புதியதாய் ஓர் எண் [ணம்
उत्पन्ना	தோன்றிற்று
ततः	இருந்தவிடத்தைவிட்டு
चैत्यप्रासादं	யாகசாலையான ஓர் பெருங்கட்டிடத்தை
आक्रमं	கிட்டினேன்.
तत्रस्थान्	அதிலிருந்த
राक्षसान्	அரக்கர்கள்
शतं वै	பலரையும்
स्तंभेन	கம்பமொன்றைக் கொண்டு
हत्वा	அடித்துக் கொன்றபின்
लङ्कायाः	லங்கைக்கு
ललामभूतः	ஓர் அலங்காரமாக [இருந்த
सः वै	அதுவும்
मया	என்னால்
विध्वंसितः	இடித்துத் தரையோடு தரையாய் ஆக்கப்பட்டது.

ततः प्रहस्तस्य सुतं जम्बुमालिनमादिशत् । राक्षसैर्बहुभिः सार्धं घोररूपैर्भयानकैः ॥

ततः	" பிறகு	भयानकैः	பயங்கரர்களான
प्रहस्तस्य	பிரஹஸ்தனுடைய	राक्षसैः	அரக்கர்கள்
सुतं	குமாரனான	बहुभिः	பலரோடு
जम्बुमालिनं	ஜம்புமாலியை	सार्धं	சேர்ந்து செல்பவனாக
घोररूपैः	கோரரூபமுடையவர்களாய்	आदिशत्	கட்டளையிட்டான்.

तमहं बलसंपन्नं राक्षसं रणकोविदम् । परिघेणातिघोरेण सूदयामि सहानुगम् ॥ ११८ ॥

अहं	" நான்	तं राक्षसं	அந்த அரக்கனை
बलसंपन्नं	சேனையுடன் கூடி வந்தவனும்	सहानुगं	கூடவந்தவர்களுட்பட
		अतिघोरेण	அதிகோரமான
रणकोविदं	சண்டையிற் பண்டிதனுமான	परिघेन	ஓர் இருப்புலக்கையைக்
		सूदयामि	கொன்றேன். [கொண்டு

तच्छ्रुत्वा राक्षसेन्द्रस्तु मन्त्रिपुत्रान् महाबलान् । पदातिबलसंपन्नान् प्रेषयामास रावणः ॥
परिघेणैव तान् सर्वाननयं यमसादनम् ॥ १२० ॥

राक्षसेन्द्रः	" ராக்ஷஸேந்திரனான	प्रेषयामास	அனுப்பினான்.
रावणः	ராவணன்	तान्	அவர்கள்
तत् श्रुत्वा	அதைக்கேட்டு	सर्वान्	எல்லோரையும்
तु	இதுவிஷயத்தில்		
महाबलान्	மஹாபலவான்களான	परिघेण एव	ஓர் இருப்புலக்கையைக் கொண்டே
मन्त्रिपुत्रान्	மந்திரிகுமாரர்களை		
पदातिबल-संपन्नान्	காலாட்களுட்பட பெருஞ்சேனையுடன் கூடியவர்களாய்	यमसादनं	யமன் வீட்டிற்கு
		अनयं	அனுப்பினேன்.

मन्त्रिपुत्रान् हतांच्छ्रुत्वा समरे लघुविक्रमान् । पञ्च सेनाग्रगाञ्छूरान् प्रेषयामास रावणः ॥
तानहं सहसैन्यान् वै सर्वानेवाभ्यसूदयम् ॥ १२२ ॥

लघुविक्रमान्	"சுறுசுறுப்புள்ள பராக்கிரமசாலிகளான	शूरान्	சூரர்கள்
		पञ्च	ஐவரை
मन्त्रिपुत्रान्	மந்திரிமைந்தர்களை	प्रेषयामास	அனுப்பினான்.
समरे	போரில்	अहं एव	நானும்
हतान्	மாண்டவர்களாக	तान्	அவர்கள்
श्रुत्वा	கேட்டு	सर्वान्	எல்லோரையும்
रावणः वै	ராவணனும்	सहसैन्यान्	ஸேனைகளுட்பட
सेनाग्रगान्	ஸேனாநாயகர்களான	अभ्यसूदयम्	கொன்றேன்.

ततः पुनर्दशग्रीवः पुत्रमक्षं महाबलम् । बहुभी राक्षसैः सार्धं प्रेषयामास रावणः ॥१२३॥

ततः	" அதன்பின்	महाबलं	மஹாபலிஷ்டனுமான
पुनः	இன்னும்	अक्षं	அக்ஷனை
रावणः	ராவணனெனும்	राक्षसैः बहुभिः	அரக்கர்கள் பலரால்
दशग्रीवः	தசக்ரீவன்	सार्धं	சேர்ந்து செல்பவனாக
पुत्रं	புதல்வனும்	प्रेषयामास	அனுப்பினான்.

तं तु मन्दोदरीपुत्रं कुमारं रणपण्डितम् । सहसा खं समुत्क्रान्तं पादयोश्च गृहीतवान् ॥
चर्मासिनं शतगुणं भ्रामयित्वा व्यपेषयम् ॥ १२४ ॥

रणपण्डितं	" சண்டையிற்பண்டிதனும்	चर्मासिनं तु	கவசமும் கத்தியுமுடை
मन्दोदरीपुत्रं	மந்தோதரியின் மைந்தனும்	सहसा	சடக்கென [யவனாகவே
खं	ஆகாயத்தில்	पादयोः च	கால்களிரண்டிற்கும்
समुत्क्रान्तं	கிளம்பிச்சென்றவனுமான	गृहीतवान्	(இடையிலிறுக்கிப்) பிடித்துக்கொண்டு
तं	அந்த	शतगुणं	கிறுகிறுவென்று
कुमारं	ராஜகுமாரனை	भ्रामयित्वा	சுழற்றி
		व्यपेषयम्	பிழிந்தெறிந்தேன்.

तमक्षमागतं भग्नं निशम्य स दशाननः । तत इन्द्रजितं नाम द्वितीयं रावणः सुतम् ॥
व्यादिदेश सुसङ्क्रुद्धो बलिनं युद्धदुर्मदम् ॥ १२५ ॥

सः	" அந்த	सुसङ्क्रुद्धः	மிகச்சினங்கொண்டவ
रावणः	ராவணனெனும்	बलिनं	பலிஷ்டனும் [னாய்
दशाननः	தசானனன்	युद्धदुर्मदं	போரில் மிகுந்த மதங்கொண்டவனுமான
तं	அந்த		
अक्षं	அக்ஷனை	इन्द्रजितं नाम	இந்திரஜித்து என்கிற
आगतं भग्नं	அழிவையடைந்தவ	द्वितीयं	இரண்டாவது
निशम्य	கேட்டு [னாக	सुतं	குமாரனை
ततः	அதனால்	व्यादिदेश	கட்டளையிட்டான்.

तच्चाप्यहं बलं सर्वं तं च राक्षसपुङ्गवम् । नष्टौजसं रणे कृत्वा परं हर्षमुपागमम् ॥१२६॥

अहं	" நான்	तं च	அவனையும்
तत्	அந்த	रणे	போரில்
बलं	ஸைன்யம்	नष्टौजसं कृत्वा	பலமறச்செய்து
सर्वं अपि च	யாவற்றையும்	परं हर्षं	பரம மகிழ்ச்சியை
राक्षसपुङ्गवं	ராக்ஷஸச்ரேஷ்டனை	उपागमम्	அடைந்தேன்.

महताऽपि महाबाहुः प्रत्ययेन महाबलः । प्रेषितो रावणेनैव सह वीरैर्मदोत्कटैः ॥१२७॥
सोऽविषह्यं हि मां बुद्ध्वा स्वबलश्चावमर्दितम् । ब्राह्मेणास्त्रेण स तु मां प्राबध्नाच्चातिवेगितः ॥

रावणेन “ராவணனால்
महता விசேஷ
प्रत्ययेन एव நம்பிக்கை கொண்டே
मदोत्कटैः மதமிகுந்த
वीरैः सह வீரர்களுடனே
प्रेषितः அனுப்பப்பட்ட
सः महाबलः அந்த மஹாபலிஷ்டன்
महाबाहुः போரில் ஸாமர்த்திய
अपि என்றாலும் [சாலி
स्वबलं தன் சைன்யத்தை
अवमर्दितं च அழிந்துபோனதாயும்

मां என்னை
अविषह्यं च இத்தன்மையனென
நிர்ணயிக்க முடியாதிரு
बुद्ध्वा உணர்ந்து [ப்பவனையும்
सः அவன்
तु அத்தருணத்தில்
अतिवेगितः மிக்க பரப்பரப்புடைய
வனாய்
ब्राह्मेण अस्त्रेण हि பிரம்ம அஸ்திரத்
मां என்னை [தாலேயே
प्राबध्नात् பிணைத்துவிட்டான்.

रज्जुभिश्च बबन्धुस्ते ततो मां तत्र राक्षसाः । रावणस्य समीपञ्च गृहीत्वा मामुपानयन् ॥

ततः “அப்பொழுது
तत्र அங்கிருந்த
ते அந்த
राक्षसाः ராக்ஷஸர்கள்
मां என்னை
रज्जुभिः च சாதாரணமான கயிறு
களைக்கொண்டும்

बबन्धुः கட்டினார்கள்;
मां என்னை
रावणस्य ராவணனுடைய
समीपं च ஸன்னிதானத்திலேயே
गृहीत्वा இழுத்துக்கொண்டு
போய்
उपानयन् சேர்த்தார்கள்.

दृष्ट्वा संभाषितश्चाहं रावणेन दुरात्मना । पृष्टश्च लङ्कागमनं राक्षसानाञ्च तं वधम् ॥

अहं च “நானும்
दृष्ट्वा च எதிர்நோக்கிப் பார்க்
दुरात्मना துராத்மாவான [கவே
रावणेन ராவணனால்
संभाषितः ஸம்பாஷிக்கப்பட்டவ
னாய்

लङ्कागमनं லங்கைக்கு வந்ததை
राक्षसानां ராக்ஷஸர்களின் [யும்
तं அந்த
वधं च வதத்தைப்பற்றியும்
पृष्टः விசாரணை செய்யப்பட்
டேன்.

तत्सर्वं च मया तत्र सीतार्थमिति जल्पितम् ॥ १३१ ॥

तत्र “அதற்கு
तत् அவை
सर्वं யாவும்
सीतार्थं ஸீதைக்காக

इति என்று கீழே சொல்லிய
விதமாய்
मया என்னால்
जल्पितं சொல்லப்பட்டது.

अस्याः सन्दर्शनाकाङ्क्षी प्राप्तस्त्वद्भवनं विभो । मारुतस्यौरसः पुत्रो वानरो हनुमानहम् ॥

विभो “‘விபுவே!
मारुतस्य வாயுவின்
औरसः पुत्रः ஔரஸபுத்திரனான
अहं நான்
हनुमान् ஹனுமான் (என்ற)
वानरः வானரன்;

सन्दर्शना-काङ्क्षी நேரில் காணவேண்டிய
வனாய்
त्वद्भवनं உன் அரண்மனைக்கு
अस्याः இவளிடமிருந்து
प्राप्तः இழுத்துவரப் பொறுத்
திருந்தேன்.

रामदूतश्च मां विद्धि सुग्रीवसचिवं कपिम् । सोऽहं दूत्येन रामस्य त्वत्सकाशमिहागतः ॥

मां	" ' என்னை
रामदूतं	ஸ்ரீராமரின் தூதனாகவும்
सुग्रीवसचिवं च	சுக்ரீவருடைய மந்திரியு
कपिं	வானரனென்று [மான
विद्धि	அறி.
सः	அந்த
अहं	நான்
इह	இப்பொழுது
रामस्य	ஸ்ரீராமருடைய
दूत्येन	தூதுகொண்டு
त्वत्सकाशं	உன்னிடம்
आगतः	வந்துசேர்ந்தேன்.

सुग्रीवश्च महातेजाः स त्वां कुशलमब्रवीत् । धर्मार्थकामसहितं हितं पथ्यमुवाच च ॥

महातेजाः	" ' பெருந்தேஜசுடைய
सः	அந்த
सुग्रीवः	சுக்ரீவர்
त्वां	உமக்கு
कुशलं	க்ஷேமம்
अब्रवीत्	சொன்னார்.
धर्मार्थकाम सहितं	தர்மம், அர்த்தம், காமம் இவைமூன்றுக்குமொத்ததையும்
हितं	யுக்தமானதையும்
पथ्यं च	க்ஷேமகரமானதையும்
उवाच	அறிய (பின்வருமாறு) சொன்னார்.

वसतो ऋश्यमूके मे पर्वते विपुलद्रुमे । राघवो रणविक्रान्तो मित्रत्वं समुपागतः ॥१३५॥

रणविक्रान्तः	" போரில் வல்ல
राघवः	ஸ்ரீராகவர்
विपुलद्रुमे	மரங்கள் செறிந்த
ऋश्यमूके पर्वते	ரிச்யமூகமலையில்
वसतः	வஸித்துக்கொண்டி
मे	எனக்கு [ருந்த
मित्रत्वं	மித்திரனாயிருத்தலை
समुपागतः	வாக்குத்தத்தம் செய்தார்.

तेन मे कथितं राजन् भार्या मे रक्षसा हृता । तत्र साहाय्यमस्माकं कार्यं सर्वात्मना त्वया ॥

तेन	" அவரால்
मे	எனக்கு
कथितं	சொல்லப்பட்டதாவது
राजन्	' அரசே !
मे	எனது
भार्या	மனைவி
रक्षसा	ஒரு ராக்ஷஸனால்
हृता	திருடிக்கொண்டு போகப்பட்டிருக்கிறான்.
तत्र	அவ்விஷயத்தில்
अस्माकं	எங்களுக்கு
त्वया	உம்மால்
साहाय्यं	ஸஹாயம்
सर्वात्मना	குறையின்றி
कार्यं	செய்யவேண்டும். "

मया च कथितं तस्मै वालिनश्च वधं प्रति । तत्र साहाय्यहेतोर्मे समयं कर्तुमर्हसि ॥१३७॥

तत्र	" அப்பொழுது
मया	என்னால்
तस्मै	அவருக்கு
कथितं	சொல்லப் பட்டதாவது
मे च	' எனக்கும்
वालिनः	வாலியின்
वधं प्रति	வதை விஷயத்தில்
साहाय्यहेतोः	ஸஹாயஞ்செய்யவேண்டியதற்கு
समयं च	ஒப்பந்தத்தையும்
कर्तुं	அளிக்க
अर्हसि	அருள்புரியவேண்டும். '

वालिना हतराज्येन सुग्रीवेण महाप्रभुः । चक्रेऽग्निसाक्षिकं सख्यं राघवः सहलक्ष्मणः ॥

सहलक्ष्मणः	"லக்ஷ்மணரோடுகூடி யிருக்கும்	हतराज्येन	அரசிழந்த
महाप्रभुः	மஹாப்ரபுவான	सुग्रीवेण	ஸுக்ரீவரோடு
राघवः	ஸ்ரீராகவர்	अग्निसाक्षिकं	அக்னி ஸாக்ஷியாக
वालिना	வாலியினல்	सख्यं	ஐகமத்திய உடன்
		चक्रे	செய்தார். [பாட்டை

तेन वालिनमुत्पाद्य शरेणैकेन संयुगे । वानराणां महाराजः कृतः स प्लवतां प्रभुः ॥

संयुगे	"யுத்தத்தில்	प्लवतां प्रभुः	வானரர்களுக்குப் பிரபுவான
वालिनं	வாலியை	सः	அவர்
एकेन	ஒரு	वानराणां	வானரர்களுக்கு
शरेण	பாணத்தால்	महाराजः	மஹாராஜனுக
उत्पाट्य	ஒழித்து	कृतः	நியமிக்கப்பட்டார்.
तेन	அவரால்		

तस्य साहाय्यमस्माभिः कार्यं सर्वात्मना त्विह । तेन प्रस्थापितस्तुभ्यं समीपमिह धर्मतः॥

इह	"இவ்விஷயத்தில்	तु	தனது கடமைபற்றி
तस्य	அவருக்கு	धर्मतः	தர்மசாஸ்திர முறைப் [படி
अस्माभिः	எங்களால்	तुभ्यं	உன்
सर्वात्मना	குறையின்றி	समीपं	இடத்திற்கு
साहाय्यं	உதவிபுரிதல்	इह	இப்பொழுது
कार्यं	நியமமான கடமை.	प्रस्थापितः	தூதாக அனுப்பப்பட்டேன்.
तेन	அவரால்		

क्षिप्रमानीयतां सीता दीयतां राघवाय च । यावन्न हरयो वीरा विधमन्ति बलं तव ॥

सीता	"ஸீதை	हरयः	வானர
क्षिप्रं	தக்ஷணமே	वीराः	வீரர்கள்
आनीयतां	திருப்பிக்கொண்டு போகப்படட்டும்.	तव	உன்
राघवाय	ஸ்ரீராகவருக்கு	बलं च	ஸாமர்த்தியத்தை எல்லாம்
दीयतां	ஒப்புவிக்கப்படட்டும்	न विधमन्ति	ஊதிவிடாமகிலிருப்பார்கள்.
यावत्	அவ்வாறு ஆகில்		

वानराणां प्रभावो हि न केन विदितः पुरा । देवतानां सकाशं च ये गच्छन्ति निमन्त्रिताः ॥

देवतानां	"தேவர்களின்	वानराणां	வானரர்களின்
सकाशं च	ஸன்னிதானத்திற்கும்	प्रभावः	பிரபாவமானது
निमन्त्रिताः	வேண்டி அழைக்கப்பட்டவர்களாய்	पुरा	இக்காலம் வரைக்கும்
ये	எவர்கள்	केन हि	எவன் ஒருவனுலும்
गच्छन्ति	போகிறுர்களோ, அப்படிப்பட்ட	विदितः न	புதிதாய் தெரிந்து கொள்ளவேண்டிய வர்த்தமானமாக இல்லை.

इति वानरराजस्त्वामाहेत्यभिहितो मया । मामैक्षत ततः क्रुद्धश्चक्षुषा प्रदहन्निव ॥१४३॥

इति "' இப்படிச்சொல்லிய
वानरराजः வானரராஜர்[தெல்லாம்
त्वां உனக்கு
आह इति உரைத்தார்' என்று
मया என்னால்
अभिहितः உறுதியாய் உரைக்கப் பட்டான்.
ततः அப்பொழுது
क्रुद्धः கோபாக்கிராந்தனாய்
मां என்னை
चक्षुषा கண்களைக்கொண்டு
प्रदहन् கொளுத்துகிறவன்
इव போல்
ऐक्षत விழித்துப்பார்த்தான்.

तेन वध्योऽहमाज्ञप्तो रक्षसा रौद्रकर्मणा । मत्प्रभावमविज्ञाय रावणेन दुरात्मना ॥१४४॥

मत्प्रभावं " எனது பிரபாவத்தை
अविज्ञाय தெரிந்துகொள்ளாமல்
तेन அந்த
रौद्रकर्मणा கொடுந்தொழில்புரியும்
दुरात्मना பாதகனான
रावणेन रक्षसा ராவணனெனும் அரக்க[னால்
अहं நான்
वध्यः கொலைத்தண்டனைக் காளாய்
आज्ञप्तः ஆக்ஞாபிக்கப்பட்டேன்.

ततो विभीषणो नाम तस्य भ्राता महामतिः । तेन राक्षसराजोऽसौ याचितो मम कारणात् ॥

ततः " அங்கே
तस्य அவனுக்கு
भ्राता தம்பி
महामतिः உத்தமகுணமுடையவர்,
विभीषणः விபீஷணர் (என்று)
नाम பெயர்.
तेन அவரால்
असौ இந்த
राक्षसराजः ராக்ஷஸராஜன்
मम कारणात् என் நிமித்தமாய்
याचितः (இப்படி) வேண்டிக் கொள்ளப்பட்டான்.

नैवं राक्षसशार्दूल त्यज्यतामेष निश्चयः । राजशास्त्रव्यपेतो हि मार्गः संसेव्यते त्वया ॥

राक्षसशार्दूल "'ராக்ஷஸசிரேஷ்டரே!
एवं இப்படி
न செய்யக்கூடாது.
एषः இந்த
निश्चयः அபிப்பிராயமானது
त्यज्यतां விடப்படவேண்டியது.
हि ஏனெனில்
त्वया உம்மால்
राजशास्त्रव्यपेतः ராஜநீதிக்கு விரோத மான
मार्गः நடவடிக்கை
संसेव्यते அனுஸரிக்கப்படுகிறது.

दूतवध्या न दृष्टा हि राजशास्त्रेषु राक्षस । दूतेन वेदितव्यं च यथार्थं हितवादिना ॥

राक्षस " ராக்ஷஸமன்னரே!
राजशास्त्रेषु ராஜநீதிசாஸ்திரங்களில்
दूतवध्या தூதனைக்கொலைபுரிதல்
न दृष्टा हि விதிக்கப்படவேயில்லை.
हितवादिना உபயோகமானஸமாசா ரத்தைச் சொல்லுகின்ற
दूतेन தூதனைக்கொண்டே
यथार्थं च காரியங்களின்சரியான நிலையையும்
वेदितव्यं உள்ளபடி அறிந்து கொள்ளவேண்டும்.

सुमहत्यपराधेऽपि दूतस्यातुलविक्रम । विरूपकरणं दृष्टं न वधोऽस्तीति शास्त्रतः ॥१४८॥

अतुलविक्रम	"'ஒப்பற்ற வீரமுடையவரே!	वधः	கொலைத்தண்டனை
सुमहति	மிகப் பெரிய	इति	என்பது
अपराधे अपि	குற்றமிருப்பினும்	न अस्ति	இல்லை.
शास्त्रतः	நீதி நூலின்படி	विरूपकरणं	அங்கபங்கம்
दूतस्य	தூதனுக்கு	दृष्टं	விதிக்கப்பட்டிருக்கிறது.'

विभीषणेनैवमुक्तो रावणः सन्दिदेश तान् । राक्षसानेतदेवास्य लाङ्गूलं दह्यतामिति ॥

विभीषणेन	"விபீஷணரால்	एवं	சரி.
इति	மேற்கண்டவிதமாய்	अस्य	இதனுடைய
उक्तः	வேண்டிக்கொள்ளப்பட்ட	लाङ्गूलं	வால்
रावणः	ராவணன்	दह्यतां	கொளுத்திவிடப்படட்டும்'
तान्	அந்த	सन्दिदेश	(என்று) கட்டளையிட்டான்.
राक्षसान्	அரக்கர்களைப் பார்த்து		
एतत् एव	'இதுவே		

ततस्तस्य वचः श्रुत्वा मम पुच्छं समन्ततः । वेष्टितं शणवल्कैश्च जीर्णैः कार्पासजैः पटैः ॥

तस्य	"அவனுடைய	समन्ततः	முழுவதும்
वचः	உத்தரவை	कार्पासजैः	பருத்திப் பஞ்சால் [நெய்த
श्रुत्वा	கேட்டு	जीर्णैः	கிழிந்துபோன
ततः	அதனால்	पटैः	துணிகளாலும்
मम	எனது	शणवल्कैः च	சணற்பிரிகளாலும்
पुच्छं	வால்	वेष्टितं	சுற்றப்பட்டது.

राक्षसाः सिद्धसन्नाहास्ततस्ते चण्डविक्रमाः । तदाऽदहन्त मे पुच्छं निघ्नन्तः काष्ठमुष्टिभिः ॥

ततः	"பின்னர்	काष्ठमुष्टिभिः	கட்டைகளாலும் முஷ்டிகளாலும்
चण्डविक्रमाः	உக்கிரமான வீரமுள்ள	निघ्नन्तः	அடிப்பவர்களாய்
ते	அந்த	मे पुच्छं	எனது வாலை
राक्षसाः	அரக்கர்கள்	तदा	அப்பொழுது
सिद्धसन्नाहाः	அகப்பட்டவனிடம் ஆத்திரங்கொண்டவர்களாய்	अदहन्त	கொளுத்தினார்கள்.

बद्धस्य बहुभिः पाशैर्यन्त्रितस्य च राक्षसैः । न मे पीडा भवेत् काचिद्दिदृक्षोर्नगरीं दिवा ॥

राक्षसैः	"அரக்கர்களால்	नगरीं	பட்டணத்தை
यन्त्रितस्य	மடக்கப்பட்டு	दिदृक्षोः	பார்க்கஎண்ணங்கொண்[டிருந்த
बहुभिः	பல	मे	எனக்கு
पाशैः	கயிறுகளைக்கொண்டு	पीडा	ஆயாசம்
बद्धस्य च	பிணிக்கப்பட்டிருந்தும்	काचित्	கொஞ்சமும்
दिवा	பகலில்	न भवेत्	உண்டாகவில்லை.

ततस्ते राक्षसाः शूरा बद्धं मामग्निसंवृतम् । अघोषयन् राजमार्गे नगरद्वारमागताः ॥

ततः	" அப்படியிருத்தலால்	आगताः	கொண்டுவந்து
ते	அந்த	बद्धं	கட்டுண்டவனும்
राक्षसाः शूराः	ராக்ஷஸசூரர்கள்	अग्निसंवृतं	தீப்பட்டு எரிகிறவனு
मां	என்னை	राजमार्गे	ராஜவீதியில் [யும்
नगरद्वारं	நகரவாசலுக்கு	अघोषयन्	இரைந்து கூறினார்கள்.

ततोऽहं सुमहद्रूपं संक्षिप्य पुनरात्मनः । विमोचयित्वा तं बन्धं प्रकृतिस्थः स्थितः पुनः ॥

ततः	" அவ்விடத்தில்	तं	அந்த
अहं	நான்	बन्धं	கட்டை
आत्मनः	எனது	विमोचयित्वा	அவிழ்த்துவிட்டு
सुमहत् रूपं	மிகப்பெரியஉருவத்தை	पुनः	மறுபடியும்
पुनः	மறுபடி	प्रकृतिस्थः	முன்போலவே
संक्षिप्य	சுருக்கிக்கொண்டு	स्थितः	ஆனேன்.

आयसं परिघं गृह्य तानि रक्षांस्यसूदयम् । ततस्तन्नगरद्वारं वेगेनाप्लुतवानहम् ॥ १५५ ॥

आयसं	" இருப்பு	ततः	அப்பால்
परिघं	உலக்கையை	अहं	நான்
गृह्य	கைக்கொண்டு	तत्	அந்த
तानि	அந்த	नगरद्वारं	கோட்டைவாசலின்மேல்
रक्षांसि	அரக்கர்களை	वेगेन	ஒரே பாய்ச்சலாய்
असूदयं	கொன்றேன்.	आप्लुतवान्	பாய்ந்தேன்.

पुच्छेन च प्रदीप्तेन तां पुरीं साट्टगोपुराम् । असंभ्रान्तोऽहमदहं युगान्ताग्निरिव प्रजाः ॥

युगान्ताग्निः	" பிரளயகாலத்துப்	पुरीं च	பட்டணத்தையெல்லாம்
प्रजाः	பிரஜைகளை [பெருந்தீ	साट्टगोपुरां	ராஜமாளிகைகள்,
इव	எப்படியோ அப்படி		கோபுரங்களுட்பட
अहं	நான்	प्रदीप्तेन	எரிகிற
असंभ्रान्तः	பரபரப்பில்லாதவனாய்	पुच्छेन	வாலினால்
तां	அந்த	अदहं	எரித்தொழித்தேன்.

विनष्टा जानकी व्यक्तं न ह्यदग्धः प्रदृश्यते । लङ्कायां कश्चिदुद्देशः सर्वा भस्मीकृता पुरी ॥
दहता च मया लङ्कां दग्धा सीता न संशयः । रामस्य हि महत्कार्यं मयेदं वितथीकृतम् ॥
इति शोकसमाविष्टश्चिन्तामहमुपागतः ॥ १५८ ॥

अहं	" நான்	सर्वा	முழுமையும்
इति	கீழே சொல்லியபடி	भस्मीकृता	சாம்பலாக்கப்பட்
शोकसमाविष्टः	சோகாக்கிராந்தனாய்		டிருக்கிறது.
चिन्तां	மனஸ்தாபத்தை	लङ्कायां	லங்கையில்
उपागतः	அடைந்திருந்தேன்,	अदग्धः	தீப்பட்டெரியாத
पुरी	' பட்டணம்	उद्देशः	இடம்

कश्चित्	எதுவும்	सीता च	ஸீதையும்
न प्रदृश्यते	காணப்படவில்லை.	दग्धा	கொளுத்தப்பட்டாள்;
हि	ஆனபடியால்	न संशयः	ஸந்தேகமில்லை.
जानकी	ஜானகி	रामस्य	ஸ்ரீராமருடைய
व्यक्तं	நிச்சயமாய்	इदं	இந்த
विनष्टा	உயிர்த்திராள்.	महत् कार्यं	பெரும் கார்யம்
लङ्कां	லங்கையை	मया हि	என்னாலேயே
दहता	கொளுத்தின	वितथीकृतं	வியர்த்தமாகச் செய்யப்பட்டது.'
मया	என்னால்		

अथाहं वाचमश्रौषं चारणानां शुभाक्षराम् । जानकी न च दग्धेति विस्मयोदन्तभाषिताम् ॥

अथ	"அப்பொழுது	जानकी च	'ஸீதை மாத்திரம்
विस्मयोदन्त-भाषितां	ஆச்சர்யவிருத்தாந்தத்தைப்பேசிக்கொண்டிருந்த	न दग्धा	வருத்தமடையாதிருந்தாள்'
चारणानां	(ஸ்வர்க்கத்தில் பாடுவோர்களான) சாரணரென்பவர்களுடைய	इति	என்ற
		शुभाक्षरां वाचं	அழகான தொனியுடன் சேர்ந்த பேச்சை
		अहं	நான்
		अश्रौषं	கேட்டேன்.

ततो मे बुद्धिरुत्पन्ना श्रुत्वा तामद्भुतां गिरम् । अदग्धा जानकीत्येवं निमित्तैश्चोपलक्षिता ॥

मे	"எனக்கு	श्रुत्वा	கேட்டு
अद्भुतां	ஆகாசவாணியான	ततः	அதனாலும்
जानकी	'ஜானகி	एवं	கீழே சொல்லப்பட்ட
अदग्धा इति	வருத்தமடையாதிருந்தாள்' என்கிற	निमित्तैः च	காரணங்களைக்கொண்டும்
तां	அந்த	उपलक्षिता	தோன்றிய
गिरं	புகழை	बुद्धिः	மனக்கவலையின்மை
		उत्पन्ना	உண்டாயிற்று.

दीप्यमाने तु लाङ्गूले न मां दहति पावकः । हृदयं च प्रहृष्टं मे वाताः सुरभिगन्धिनः ॥

लाङ्गूले	"வால்	वाताः च	காற்றெல்லாம்
दीप्यमाने तु	தீப்பற்றி எரிகையிலும்	सुरभिगन्धिनः	குளிர்ந்த மனத்துடன் வீசிற்று.
मां	எனக்கு	मे	எனது
पावकः	அக்னி	हृदयं	நெஞ்சம்
न दहति	துன்பமுறுத்தவில்லை.	प्रहृष्टं	தெளிந்திருந்தது.

तैर्निमित्तैश्च दृष्टार्थैः कारणैश्च महागुणैः । ऋषिवाक्यैश्च सिद्धार्थैरभवं हृष्टमानसः ॥
पुनर्दृष्ट्वा च वैदेहीं विसृष्टश्च तया पुनः ॥ १६२ ॥

दृष्टार्थैः	"சந்தேஹமறமனத்தில் தோன்றிய	महागुणैः	நற்பயனைத் தரும்
तैः निमित्तैः च	அந்தக் காரணங்களைக் கொண்டும்	कारणैः च	செய்கைகளைக் கொண்டும்
		सिद्धार्थैः	சொன்னபடியே நடைபெறும்

ऋषिवाक्यैः च	ரிஷிகளின் சொற்களாலும்	वैदेहीं च	வைதேஹியையும்
हृष्टमानसः	மனச்சந்துஷ்டிகொண்டவனாக	पुनः	இன்னொருதரம்
अभवं	ஆனேன்.	दृष्ट्वा	நேரில் பார்த்து
पुनः	அப்படியிருந்தும்	तया च	அவளாலேயே
		विसृष्टः	விடைகொடுத்தனுப்பப்பட்டேன்.

ततः पर्वतमासाद्य तत्रारिष्टमहं पुनः । प्रतिप्लवनमारेभे युष्मद्दर्शनकाङ्क्षया ॥ १६३ ॥

ततः	"அங்கிருந்து	अहं आसाद्य	நான் அடைந்து
तत्र	அங்குள்ள	युष्मद्दर्शन-काङ्क्षया	உங்களைக்காணவேண்டுமென்கிற ஆவலுடன்
अरिष्टं	அரிஷ்டமென்ற	प्रतिप्लवनं	திரும்பிப் பறப்பதற்கு
पर्वतं	மலையை	आरेभे	ஊக்கம் கொண்டேன்.
पुनः	மீளவும்		

ततः पवनचन्द्रार्कसिद्धगन्धर्वसेवितम् । पन्थानमहमाक्रम्य भवतो दृष्टवानिह ॥ १६४ ॥

ततः	"பிறகு	आक्रम्य	தாவி வந்து
पवनचन्द्रार्क-सिद्धगन्धर्व-सेवितं	வாயு,சந்திரசூரியர்கள், சித்தர், கந்தர்வர்கள், இவர்கள் செல்லும்	अहं	நான்
		भवतः	உங்களை
		इह	இதோ
पन्थानं	ஆகாயமார்க்கமாக	दृष्टवान्	கண்டுகொண்டேன்.

राघवस्य प्रभावेन भवतां चैव तेजसा । सुग्रीवस्य च कार्यार्थं मया सर्वमनुष्ठितम् ॥

राघवस्य	"ஸ்ரீராகவருடைய	सुग्रीवस्य	ஸுக்ரீவருடைய
प्रभावेन	பிரபாவத்தாலும்	कार्यार्थं च	காரியம்ஸாபல்யமாகும் பொருட்டே
भवतां	உங்களுடைய		
तेजसा एव च	தேஜஸ்ஸினாலும்	सर्वं	எல்லாம்
मया	என்னால்	अनुष्ठितं	அனுஷ்டிக்கப்பட்டது.

एतत्सर्वं मया तत्र यथावदुपपादितम् । अतो यत्कर्म शेषं नस्तत् सर्वं क्रियतामिति ॥

तत्र	"விஷயமிப்படியிருக்கையில்	अतः	இதிலிருந்து
मया	என்னால்	शेषं	இனிச்செய்யவேண்டிய
एतत् सर्वं	இது எல்லாம்	नः	நம்முடைய
यथावत्	நடந்தபடி	कर्म	காரியம்
इति	இவ்வண்ணம்	यत्	எதுவோ
उपपादितं	சுருக்கமாய் உரைக்கப்பட்டது.	तत् सर्वं	அது எல்லாம்
		क्रियतां	செய்யலாம்."

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये सुन्दरकाण्डे अष्टपञ्चाशः सर्गः ॥ ५८ ॥

आदितः श्लोकाः 14394 सुन्दरकाण्डे आदितः श्लोकाः 2604

अनन्तरकृत्यालोचनम्—மேல் செய்யவேண்டியதை ஆலோசித்தல்

एतदाख्याय तत्सर्वं हनुमान् मारुतात्मजः । भूयः समुपचक्राम वचनं वक्तुमुत्तरम् ॥

मारुतात्मजः	வாயுகுமாரரான	वक्तुं	எடுத்துரைக்கவேண்டி
हनुमान्	ஹனுமார்	उत्तरं	முக்கியமான [யதாய்
तत् सर्वं	அது எல்லாவற்றையும்	वचनं	வசனத்தை
आख्याय	சொல்லிவிட்டு	एतत्	பின்கண்டபடி
भूयः	அவசியமானபடி	समुपचक्राम	சொல்லிமுடித்தார்.

सफलो राघवोद्योगः सुग्रीवस्य च संभ्रमः । शीलमासाद्य सीताया मम च प्रीणितं मनः ॥

सीतायाः	"ஸீதையின்	राघवोद्योगः	ஸ்ரீராகவரின் காரியமும்
शीलं	சீலத்தை	सफलः	பயன்பெற்றதாகிறது.
आसाद्य	பிரத்யக்ஷமாய்ப்பார்த்த	सुग्रीवस्य	ஸுக்ரீவருடைய
मम	எனது [பின்னர்	संभ्रमः च	மதிப்பும்
मनः	மனம்	च	அப்படியே பயன்பெற்ற
प्रीणितं	தணிந்தது,		தாகிறது.

तपसा धारयेल्लोकान् क्रुद्धो वा निर्दहेदपि । सर्वथाऽतिप्रवृद्धोऽसौ रावणो राक्षसाधिपः ॥
यस्य तां स्पृशतो गात्रं तपसा न विनाशितम् ॥ ३ ॥

राक्षसाधिपः	"ராக்ஷஸாதிபனும்	क्रुद्धः वा	சினங்கொண்டவனாகில்
तपसा	தவத்தின்மஹிமையால்	निर्दहेत् अपि	அழிக்கவும் முடியும்.
अतिप्रवृद्धः	அதிக மேன்மை பெற்ற வனுமான	तां	அவளை
		स्पृशतः	ஸ்பரிசித்த
असौ रावणः	இந்த ராவணன்	यस्य	எவனோ அவனுடைய
लोकान्	உலகங்களை	गात्रं	சரீரம்
सर्वथा	எப்படியும்	तपसा	தவத்தின் மஹிமையால்
धारयेत्	தாங்கமுடியும்.	न विनाशितं	அழிந்துபோகவில்லை.

न तदग्निशिखा कुर्यात् संस्पृष्टा पाणिना सती । जनकस्यात्मजा कुर्याद्यत्क्रोधकलुषीकृता ॥

जनकस्य	"ஜனகரின்	तत्	அதை
आत्मजा सती	திருமகளான உத்தமி	पाणिना	கையினால்
क्रोधकलुषीकृता	கோபத்தால் மனவருத் தத்திலிருப்பவளாய்	संस्पृष्टा	நன்கு தொடப்பெற்ற
		अग्निशिखा	அக்னிக்கொழுந்தும்
यत् कुर्यात्	எதைச் செய்வாளோ,	न कुर्यात्	செய்யமுடியாது.

अशोकवनिकामध्ये रावणस्य दुरात्मनः । अधस्ताच्छिंशुपावृक्षे साध्वी करुणमास्थिता ॥

दुरात्मनः	"துராத்மாவான	शिंशुपावृक्षे	சிம்சுபாமரத்தின்
		अधस्तात्	அடியில்
रावणस्य	ராவணனுடைய	साध्वी	சற்குணசாலியானவள்
अशोकवनिका-मध्ये	அசோகவனத்தின் நடுவில்	करुणं	விசாரத்தில்
		आस्थिता	மூழ்கிக்கிடக்கிறாள்.

राक्षसीभिः परिवृता शोकसन्तापकर्शिता । मेघलेखापरिवृता चन्द्रलेखेव निष्प्रभा ॥ ६ ॥

मेघलेखापरिवृता "மேகபங்திகளால் மூடுண்டிருக்கிற
चन्द्रलेखा इव சந்திரக்கலைபோல்
राक्षसीभिः அரக்கிகளாலே

परिवृता சூழப்பட்டவளாய்
निष्प्रभा ஒளி மழுங்கியவளாய்
शोकसन्तापकर्शिता சோகத்தால் வாடி இளைத்திருக்கிறாள்.

अचिन्तयन्ती वैदेही रावणं बलदर्पितम् । पतिव्रता च सुश्रोणी अवष्टब्धा च जानकी ॥

जानकी "ஜனகர் திருமகளான
वैदेही च வைதேஹியும்
अवष्टब्धा தகையப்பட்டாள்.
सुश्रोणी கட்டழகியான

पतिव्रता பதிவ்ரதை
बलदर्पितं रावणं பலமிகுந்த ராவணனை
अचिन्तयन्ती च ஒரு பொருட்டாய் எண்ணவில்லை.

अनुरक्ता हि वैदेही रामं सर्वात्मना शुभा । अनन्यचित्ता रामे च पौलोमीव पुरन्दरे ॥

सर्वात्मना "எல்லா வகையாலும்
शुभा பவித்திரையான
वैदेही வைதேஹி
पुरन्दरे இந்திரனிடத்தில்
पौलोमी इव இந்திராணிபோல்

रामे च ஸ்ரீராமரிடத்திலேயே
अनन्यचित्ता ஏகாக்கிரசித்தமுடைய [வளாய்
रामं हि ஸ்ரீராமரையே
अनुरक्ता விச்வஸித்தவளாயிருக்கிறாள்.

तदेकवासस्संवीता रजोध्वस्ता तथैव च । शोकसन्तापदीनाङ्गी सीता भर्तृहिते रता ॥९॥

सीता "ஸீதை
तदेकवासः संवीता च அப்போதுடுத்தத ஆடையை அணிந்தவளாய்
तथा एव அப்படியே
रजोध्वस्ता புழுதிபடிந்தவளாயும்

शोकसन्तापदीनाङ्गी சோகத்தால் வாடிஇளைத்தசரீரமுடையவளாயும்
भर्तृहिते நாயகருடைய நன்மையில்
रता செலுத்திய மனமுடையவளாயிருக்கிறாள்.

सा मया राक्षसीमध्ये तर्ज्यमाना मुहुर्मुहुः । राक्षसीभिर्विरूपाभिर्दृष्टा हि प्रमदावने ॥

प्रमदावने "சிங்காரவனத்தில்
राक्षसीमध्ये அரக்கிகளினிடையே
सा அவள்
विरूपाभिः கோரரூபமுள்ள
राक्षसीभिः அரக்கிகளால்

मुहुः मुहुः அடிக்கடி
तर्ज्यमाना மிரட்டப்பட்டு திகிலடைந்தவளாய்
मया हि என்னால் மாத்திரம்
दृष्टा பார்க்கப்பட்டாள்.

एकवेणीधरा दीना भर्तृचिन्तापरायणा । अधःशय्या विवर्णाङ्गी पद्मिनीव हिमोदये ॥
रावणाद्विनिवृत्तार्था मर्तव्यकृतनिश्चया । कथञ्चिन्मृगशावाक्षी विश्वासमुपपादिता ॥१२॥

मृगशावाक्षी "மான்குட்டியின் கண்களையொத்த கண்களையுடையவளும்,
भर्तृचिन्तापरायणा நாதனை நினைப்பதையே எந்த வேளையிலும் எல்லாக்கார்யமாய்க் கொண்டவளும்,

एकवेणीधरा ஒரே பின்னலான தலைமயிருடையவளும்
अधःशय्या தரையிலே சயனித்திருந்தவளும்,
हिमोदये பனிக்காலத்தில்
पद्मिनी इव தாமரைபோல்

रावणात्	ராவணனிடத்திலின்று	दीना	பரிதாபமான நிலையிலி ருந்தவளுமான அவள்
विनिवृत्तार्था	தப்பவழிகாணுதவளாய்	कथञ्चित्	எவ்வளவோ கஷ்டப்
विवर्णाङ्गी	மனமிழந்தவளாய்	विश्वासं	நம்பிக்கையை [பட்டு
मर्तव्यकृतनिश्चया	உயிரை மாய்க்க நிச்ச யித்திருந்தவளும்	उपपादिता	அடையும்படி செய்யப் பட்டாள்.

ततः संभाषिता चैव सर्वमर्थं च दर्शिता । रामसुग्रीवसख्यं च श्रुत्वा प्रीतिमुपागता ॥

ततः	"அதன்மேல்	रामसुग्रीव-सख्यं च	ஸ்ரீராமருக்கும், ஸுக்ரீ வருக்குமுண்டான சி
संभाषिता	ஸம்பாஷணைசெய்தாள்.	श्रुत्वा	கேட்டு [னேகத்தையும்
सर्वं अर्थं च	எல்லாக்கார்யத்தையும்	प्रीतिं	மன அமைதியை
एव च	பாக்கியில்லாமல்	उपागता	பெற்ருள்.
दर्शिता	அறிவிக்கப்பட்டாள்.		

नियतः समुदाचारो भक्तिर्भर्तरि चोत्तमा । यन्न हन्ति दशग्रीवं स महात्मा कृतागसम् ॥
निमित्तमात्रं रामस्तु वधे तस्य भविष्यति ॥ १४ ॥

नियतः	"உறுதியானவரும்	भविष्यति	ஆகப்போகிறுர்.
समुदाचारः	ஸம்ப்ரதாயானுஷ்டான முடையவரும்,	यत्	ஆகையால்
		भर्तरि	நாயகரிடத்தில்
महात्मा च	மஹாத்மாவுமான	उत्तमा भक्तिः तु	உத்தமபக்திதான்
सः रामः	அந்த ஸ்ரீராமர்	कृतागसं	பெருங்குற்றவாளியான
तस्य	அவனுடைய	दशग्रीवं	தசக்ரீவனை
वधे	வதை விஷயத்தில்	न हन्ति	கொன்றுவிடாமலிருக் கிறது.
निमित्तमात्रं	ஏற்ற கருவியாக		

सा प्रकृत्यैव तन्वङ्गी तद्वियोगाच्च कर्शिता । प्रतिपत्पाठशीलस्य विद्येव तनुतां गता ॥

सा	"அவள்	प्रतिपत्पाठशीलस्य	பிரதமையில் படிக்கிற
प्रकृत्या एव	ஸ்வாபாவமாகவே	विद्या	வித்தை [வனுடைய
तन्वङ्गी	மெலிந்த சரீரமுடைய வள்,	इव	எப்படியோ அப்படி
		तनुतां गता	தேய்வை அடைந்தவ
तद्वियोगात्	அவரைவிட்டுப்பிரிந்த தால்	च	இன்னும் [ளாய்
		कर्शिता	இளைத்திருக்கிருள்.

एवमास्ते महाभागा सीता शोकपरायणा ॥ १६ ॥
यदत्र प्रतिकर्तव्यं तत्सर्वमुपपाद्यताम् ॥ १७ ॥

महाभागा	"மஹாபாகையான	अत्र	இவ்விஷயத்தில்
सीता	ஸீதை	प्रतिकर्तव्यं	பழிக்குப்பழி செய்ய
एवं	இவ்வண்ணம்	यत्	எதுவோ [வேண்டியது
शोकपरायणा	துன்பத்திலாழ்ந்தவ	तत् सर्वं	அது எல்லாம்
आस्ते	இருக்கிருள். [ளாக	उपपाद्यताम्	செய்யப்படட்டும்."

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकिये आदिकाव्ये सुन्दरकाण्डे एकोनषष्टितमः सर्गः ॥ ५९ ॥

आदितः श्लोकाः 14411 सुन्दरकाण्डे आदितः श्लोकाः 2621

अङ्गदजांबवत्संवादः—அங்கதனுடையவும் ஜாம்பவந்தருடையவும் ஸம்வாதம்

तस्य तद्वचनं श्रुत्वा वालिसूनुरभाषत ॥ १ ॥

तस्य	அவருடைய	वालिसूनुः	வாலியின் குமாரன்
तत् वचनं	அம்மொழியை	अभाषत	இப்படிப் பிரசங்கித்தான்.
श्रुत्वा	கேட்டு		

जाम्बवत्प्रमुखान् सर्वाननुज्ञाप्य महाहरीन्। अस्मिन्नेवंगते कार्ये भवतां च निवेदिते ॥ न्याय्यं स्म सह वैदेह्या द्रष्टुं तौ पार्थिवात्मजौ ॥ २ ॥

भवतां	"உங்களுக்கு	अनुज्ञाप्य	அனுமதிக்கச்செய்து
निवेदिते	அறிவித்த	तौ	அந்த
अस्मिन् कार्ये	இந்தக் கார்யம்	पार्थिवात्मजौ	ராஜகுமாரர்களிருவரையும்
एवंगते	இப்படி இருக்கையில்	वैदेह्या	வைதேஹியோடு
जांबवत् प्रमुखान्	ஜாம்பவந்தரை தலைமையாயுடைய	सह	கூடவே
महाहरीन्	வானரப் பெரியவர்கள்	द्रष्टुं	காண்பதற்கு
सर्वान् च	அனைவரையும்	न्याय्यं स्म	நியமம் கொள்வோம்.

अहमेकोऽपि पर्याप्तः सराक्षसगणां पुरीम्। तां लङ्कां तरसा हन्तुं रावणं च महाबलम् ॥

अहं	"நான்	महाबलं	மஹாபலிஷ்டனான
एकः अपि	ஒருவனே	रावणं च	ராவணனையும்
सराक्षसगणां	ராக்ஷஸ கணங்களுட்பட	तरसा	வலுவுகொண்டு
तां	அந்த	हन्तुं	தொலைக்க
लङ्कां पुरीं	லங்காபுரியையும்	पर्याप्तः	போதுமானவன்.

किं पुनः सहितो वीरैर्बलवद्भिः कृतात्मभिः। कृतास्त्रैः प्लवगैः शूरैर्भवद्भिर्विजयैषिभिः ॥

वीरैः	"வீரர்களும்	विजयैषिभिः	ஜயத்தைக் கோரிய
बलवद्भिः	பலவான்களும்	प्लवगैः	வானரர்களுமான
कृतात्मभिः	தைரியசாலிகளும்	भवद्भिः	உங்களோடு
कृतास्त्रैः	அஸ்திரவித்தைகளறிந்தவர்களும்	सहितः	கூடினவன் என்றால்
शूरैः	சூரர்களும்	किं पुनः	சொல்லவும் வேண்டுமோ?

अहं तु रावणं युद्धे ससैन्यं सपुरस्सरम्। सहपुत्रं वधिष्यामि सहोदरयुतं युधि ॥ ५ ॥

अहं	"நான்	सपुरस्सरं	கூடவந்தவர்களுட்படவும்,
युधि	போரில்	सहपुत्रं	புத்திரர்களுட்படவும்,
युद्धे तु	கைச்சண்டையிலேயே	सहोदरयुतं	ஸஹோதரர்களுட்படவும்
रावणं	ராவணனை	वधिष्यामि	வதைப்பேன்.
ससैन्यं	ஸைன்யங்களுட்படவும்,		

ब्राह्ममैन्द्रञ्च रौद्रञ्च वायव्यं वारुणं तथा । यदि शक्रजितोऽस्त्राणि दुर्निरीक्षाणि संयुगे ॥
तान्यहं विधमिष्यामि निहनिष्यामि राक्षसान् । भवतामभ्यनुज्ञातो विक्रमो मे रुणद्धि तम् ॥

अहं	"நான்	तानि	அந்த
ब्राह्मं	பிரம்ஹாஸ்திரத்தையும்,	अस्त्राणि	அஸ்திரங்களை
ऐन्द्रं च	இந்திராஸ்திரத்தையும்,	यदि	என்றாலும்
रौद्रं	ருத்திராஸ்திரத்தையும்,	विधमिष्यामि	அழிப்பேன்.
वायव्यं	வாயவ்யாஸ்திரத்தையும்,	राक्षसान्	அரக்கர்களை
वारुणं च	வாருணாஸ்திரத்தையும்,	निहनिष्यामि	கொன்றுவிடுவேன்.
तथा	அவ்வாறே	भवतां	உங்களுடைய
शक्रजितः	இந்திரஜித்தின்	अभ्यनुज्ञातः	அனுக்ஞை பெற்ற
संयुगे	போரில்	मे विक्रमः	எனது பராக்கிரமம்
दुर्निरीक्षाणि	காணவும் முடியாத	तं	அவனை
		रुणद्धि	அடக்கிவிடும்.

मयाऽतुला विसृष्टा हि शैलवृष्टिर्निरन्तरा । देवानपि रणे हन्यात् किं पुनस्तान्निशाचरान् ॥

मया	"என்னால்	देवान् अपि	தேவர்களையும்
निरन्तरा विसृष्टा	ஓயாது பொழியப்பட்ட	हन्यात्	கொல்லும்.
अतुला	ஒப்பற்ற	निशाचरान्	அரக்கர்களான
शैलवृष्टिः	கல்மாரி	तान् हि	அவர்களைப்பற்றி
रणे	போரில்	किं पुनः	கேட்கவும்வேண்டுமோ ?

सागरोऽप्यतियाद्वेलां मन्दरः प्रचलेदपि । न जाम्बवन्तं समरे कम्पयेदरिवाहिनी ॥ ९ ॥

सागरः अपि	"ஸமுத்திரமும்	जाम्बवन्तं	ஜாம்பவந்தரை
वेलां	கரையை	समरे	யுத்தத்தில்
अतियात्	கடந்து புரளும்;	अरिवाहिनी	சத்துருஸைன்யம்
मन्दरः अपि	மந்தரமலையும்	न कम्पयेत्	அசைக்கமுடியாது.
प्रचलेत्	அசைந்தாடும்;		

सर्वराक्षससङ्घानां राक्षसा ये च पूर्वकाः । अलमेको विनाशाय वीरो वायुसुतः कपिः ॥

सर्वराक्षस-सङ्घानां	"எல்லா ராக்ஷஸக் கூட்டங்களுக்கும்	विनाशाय	அழிவிற்கு
पूर्वकाः राक्षसाः	முன்னணியாக நிற்பவர்களான அரக்கர்கள்	कपिः	வானரரும்
ये च	எவர்களோ (அவர்களுடைய)	वीरः	வீரருமான
		वायुसुतः	வாயுகுமாரர்
		एकः अलं	ஒருவரே போதும்.

पनसस्योरुवेगेन नीलस्य च महात्मनः । मन्दरोऽप्यवशीर्येत किं पुनर्युधि राक्षसाः ॥

पनसस्य	"பனஸனுடையவும்,	मन्दरः अपि	மந்தரமலையும்
महात्मनः	மஹாத்மாவான	अवशीर्येत	பொடிபடும் ;
नीलस्य च	நீலனுடையவும்,	युधि	போரில்
ऊरुवेगेन	தொடையின்வேகத்தால்	राक्षसाः	அரக்கர்கள்
		किं पुनः	ஒரு பொருட்டோ ?

सदेवासुरयक्षेषु गन्धर्वोरगपक्षिषु । मैन्दस्य प्रतियोद्धारं शंसत द्विविदस्य वा ॥ १२ ॥

सदेवासुरयक्षेषु "தேவர், அஸுரர், யக்ஷர்களுடன் கூடிய
गन्धर्वोरगपक्षिषु கந்தர்வர்கள், நாகர்கள், பக்ஷிகள் இவர்களுள்
मैन्दस्य மைந்தனுடைவது
द्विविदस्य वा த்விவிதனுடைவது
प्रतियोद्धारं எதிர்த்து யுத்தம் செய்ய வல்லவனொருவனை
शंसत சொல்லுங்கள்.

अश्विपुत्रौ महाभागावेतौ प्लवगसत्तमौ । एतयोः प्रतियोद्धारं न पश्यामि रणाजिरे ॥१३॥

एतौ "இவ்விருவர்கள்
अश्विपुत्रौ அச்வினீதேவகுமாரர்களாய்
महाभागौ மஹாபாகர்களான
प्लवगसत्तमौ வானரோத்தமர்கள்;
एतयोः இவ்விருவர்களுடன்
रणाजिरे யுத்தக்களத்தில்
प्रतियोद्धारं எதிர்த்துப் போர்புரிய வல்லவனொருவனை
न पश्यामि நானறியேன்.

पितामहवरोत्सेकात् परमं दर्पमास्थितौ । अमृतप्राशिनावेतौ सर्ववानरसत्तमौ ॥ १४ ॥

एतौ "இவ்விருவர்கள்
पितामह- वरोत्सेकात् பிரம்மாவினுடைய வரத்தின் பெருமையால்
परमं அதிக
दर्पं கர்வத்தை
आस्थितौ அடைந்தவர்கள்;
अमृतप्राशिनौ அமுதத்தை அருந்தினவர்கள்;
सर्ववानरसत्तमौ எல்லா வானரர்களிலும் மேலானவர்கள்.

अश्विनोर्माननार्थं हि सर्वलोकपितामहः । सर्वावध्यत्वमतुलमनयोर्दत्तवान् पुरा ॥ १५ ॥

पुरा "முன்பு
सर्वलोकपितामहः உலகங்களுக்கெல்லாம் பிதாமஹர்,
अश्विनोः அச்வினீ தேவர்களின்
माननार्थं கௌரவத்திற்காக
अनयोः இவ்விருவர்களுக்கும்
सर्वावध्यत्वं எவராலுமழிவில்லாமை என்னும்
अतुलं இணையில்லாப் பெருமையை
दत्तवान् हि அளித்திருக்கிறாரன்றோ!

वरोत्सेकेन मुक्तौ च प्रमथ्य महतीं चमूम् । सुराणाममृतं वीरौ पीतवन्तौ प्लवङ्गमौ ॥१६॥

प्लवङ्गमौ "வானரர்களான
वीरौ இவ்விரு வீரர்கள்
वरोत्सेकेन வரத்தின் பெருமையால்
सुराणां தேவர்களின்
महतीं மஹத்தான
चमूं च ஸைன்யத்தையும்
प्रमथ्य ஹதம் செய்து
मुक्तौ விடுபட்டவர்களாய்
अमृतं அமுதத்தை
पीतवन्तौ அருந்தினவர்கள்.

एतावेव हि सङ्क्रुद्धौ सवाजिरथकुञ्जराम् । लङ्कां नाशयितुं शक्तौ सर्वे तिष्ठन्तु वानराः ॥

वानराः "வானரர்கள்
सर्वे யாவரும்
तिष्ठन्तु ஒருபுறமிருக்கட்டும்;
सङ्क्रुद्धौ பயங்கரர்களான
एतौ இவ்விருவர்
एव மாத்திரமே
सवाजिरथकुञ्जरां குதிரை, தேர், யானை இவைகளுடன் கூடிய
लङ्कां லங்கையை
हि தப்பாமல்
नाशयितुं அழிப்பதற்கு
शक्तौ போதுமானவர்கள்.

अयुक्तं तु विना देवीं दृष्टवद्भिश्च वानराः। समीपं गन्तुमस्माभी राघवस्य महात्मनः॥

वानराः	" வானரர்களே !	विना	கூட அழைத்துப்போகா
दृष्टवद्भिः	வர்த்தமானம் அறிந்து கொண்டவர்களான	महात्मनः	மஹாத்மாவான [மல்
अस्माभिः	நம்மால்	राघवस्य	ஸ்ரீராகவரது
तु	இந்த சந்தர்ப்பத்தில்	समीपं	ஸன்னதிக்கு
देवीं च	ஸீதையையும்	गन्तुं	செல்ல
		अयुक्तं	தகாது.

दृष्टा देवी न चानीता इति तत्र निवेदनम्। अयुक्तमिव पश्यामि भवद्भिः ख्यातविक्रमैः॥

ख्यातविक्रमैः	பேர்பெற்ற பராக்கிரம சாலிகளான	न आनीता	அழைத்துக்கொண்டு வரப்படவில்லை'
भवद्भिः	உங்களால்	इति	என்று
देवी	'தேவி	तत्र निवेदनं	அங்கு அறிவித்தல்
दृष्टा	காணப்பட்டாள்;	अयुक्तं इव	அயுக்தம் என்று
च	ஆனல்	पश्यामि	நினைக்கிறேன்.

न हि नः प्लवने कश्चिन्नापि कश्चित् पराक्रमे। तुल्यः सामरदैत्येषु लोकेषु हरिसत्तमाः॥

हरिसत्तमाः	"வானரோத்தமர்காள்!	तुल्यः	ஈடானவன்
सामरदैत्येषु	தேவாஸுரர்களுள் ளிட்ட	कश्चित्	ஒருவனும்
		न	கிடையாது.
लोकेषु अपि	உலகங்களிலும்	पराक्रमे हि	பராக்கிரமத்திலும்
प्लवने	பறப்பதில்	कश्चित्	ஒருவனும்
नः	நமக்கு	न	கிடையாது.

तेष्वेवं हतवीरेषु राक्षसेषु हनूमता। किमन्यदत्र कर्तव्यं गृहीत्वा याम जानकीम्॥ २१॥

तेषु	" அந்த	गृहीत्वा	அழைத்துக்கொண்டு
राक्षसेषु	அரக்கர்களில்	याम	நாம் செல்வோம்.
एवं	இவ்வண்ணம்	अत्र	இது விஷயத்தில்
हनूमता	ஹனுமாரால்	कर्तव्यं	செய்யத்தக்கது
हतवीरेषु	வீரர்கள் இறந்துபோன	अन्यत्	இதைத்தவிர வேறு
जानकीं	ஜானகியை [பின்	किं	என்ன இருக்கிறது."

तमेवं कृतसङ्कल्पं जाम्बवान् हरिसत्तमः। उवाच परमप्रीतो वाक्यमर्थवदर्थवित्॥ २२॥

अर्थवित्	காரியங்களில் நிபுண	एवं	இவ்விதமான
हरिसत्तमः	வானரர்களுக்குத் [ரும் தலைவருமான	कृतसङ्कल्पं	அபிப்பிராயம்கொண்ட
		तं	அவனைப் பார்த்து
जाम्बवान्	ஜாம்பவந்தர்	अर्थवत्	ஸாரமுடையதான
परमप्रीतः	பரமப்ரீதிகொண்ட வராய்	वाक्यं	இந்த மொழியை
		उवाच	உரைத்தார்.

न तावदेषा मतिरक्षमा नो यथा भवान् पश्यति राजपुत्र ।
यथा तु रामस्य मतिर्निविष्टा तथा भवान् पश्यतु कार्यसिद्धिम् ॥ २३ ॥

राजपुत्र	"அரசகுமாரா !
यथा	எப்படி
भवान्	தாம்
पश्यति	உத்தேசிக்கிறீரோ,
एषा मतिः	இந்த அபிப்பிராயம்
नः	நமக்கு
तावत्	இப்பொழுது
अक्षमा न	அஸாத்தியமானதில்லை.
तु	ஆயினும்

रामस्य	ஸ்ரீராமருடைய
निविष्टा	தீர்மானமான
मतिः	திருவுள்ளம்
यथा	எப்படியோ
तथा	அப்படியே
भवान्	தாங்கள்
कार्यसिद्धिं	காரிய ஸாதகத்தை
पश्यतु	கவனிக்க வேண்டும்."

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये सुन्दरकाण्डे षष्टितमः सर्गः ॥ ६० ॥

आदितः श्लोकाः 14434 सुन्दरकाण्डे आदितः श्लोकाः 2644

एकषष्टितमः सर्गः—அறுபத்தோராவது ஸர்க்கம் ॥ ६१ ॥

मधुवनभङ्गः—மதுவனமழித்தல்

ततो जाम्बवतो वाक्यमगृह्णन्त वनौकसः । अङ्गदप्रमुखा वीरा हनुमांश्च महाकपिः ॥ १ ॥

महाकपिः	மஹாகபியான
हनुमान्	ஹனுமாரும்
अङ्गदप्रमुखाः	அங்கதன் முதலிய
वनौकसः	வானர

वीराः च	வீரர்களும்
ततः	அப்பொழுது
जांबवतः	ஜாம்பவந்தருடைய
वाक्यं	வாக்கியத்தை
अगृह्णन्त	அங்கீகரித்தார்கள்.

प्रीतिमन्तस्ततः सर्वे वायुपुत्रपुरस्सराः । महेन्द्राद्रिं परित्यज्य पुप्लुवुः प्लवगर्षभाः ॥ २ ॥
मेरुमन्दरसङ्काशा मत्ता इव महागजाः । छादयन्त इवाकाशं महाकाया महाबलाः ॥ ३ ॥
सभाज्यमानं भूतैस्तमात्मवन्तं महाबलम् । हनुमन्तं महावेगं वहन्त इव दृष्टिभिः ॥ ४ ॥
राघवे चार्थनिर्वृत्तिं कर्तुं च परमं यशः । समाधाय समृद्धार्थाः कर्मसिद्धिभिरुन्नताः ॥
प्रियाख्यानपराः सर्वे सर्वे युद्धाभिनन्दिनः । सर्वे रामप्रतीकारे निश्चितार्था मनस्विनः ॥

मेरुमन्दर-सङ्काशाः	மேருபர்வதம், மந்தரபர்வதம்போன்றவர்களும்,
मत्ताः	மதங்கொண்ட
महागजाः इव	மஹாகஜங்கள் போன்றவர்களும்,
महाबलाः	மஹாபலிஷ்டர்களும்,
महाकायाः	பெருத்த சரீரமுடையவர்களும்,
राघवे	ஸ்ரீராகவர் விஷயத்தில்

अर्थनिर्वृत्तिं च	கார்யத்தை முடித்தலையும்,
परमं	நிகரற்ற
यशः च	கீர்த்தியையும்
कर्तुं	அளிக்க
समाधाय	தக்கபடி யோசித்து
समृद्धार्थाः	காரியம் கைகூடியவர்களாய்
कर्मसिद्धिभिः	கார்யஸித்திகளால்

उन्नताः	மேன்மைகொண்டவர்களும்,	सभाज्यमानं	புகழ்ந்தேற்றப்பட்டவரும்
सर्वे	எல்லோரும்	महाबलं	மஹாபலிஷ்டரும்
प्रियाख्यानपराः	இனிது சொல்ல ஆத்திரமுடையவர்களாய்	महावेगं	மஹா ஸாமர்த்தியசாலியும்
सर्वे	எல்லோரும்	आत्मवन्तं	ஞானவானுமான
युद्धाभिनन्दिनः	படைசெய்ய ஆயத்தப்பட்டவர்களாய்	तं	அந்த
सर्वे	எல்லோரும்	हनुमन्तं	ஹனுமாரை
रामप्रतीकारे	ஸ்ரீராமருக்கு நன்றி செய்வதில்	दृष्टिभिः	திருஷ்டிகளால்
निश्चितार्थाः	உற்சாகங்கொண்டவர்களும்,	वहन्तः इव	சுமந்துகொண்டு போகிறவர்களென
मनस्विनः	பெருமனத்தினர்களுமான	वायुपुत्रपुरःसराः	வாயுகுமாரரை முன்னிட்டவர்களாய்
प्लवगर्षभाः	வானரச்ரேஷ்டர்கள்	महेन्द्राद्रिं	மஹேந்திரமலையை
सर्वे	எல்லோரும்	परित्यज्य	விட்டு
प्रीतिमन्तः	மனமகிழ்ந்தவர்களாய்	ततः	அங்கிருந்து
भूतैः	பூதங்களால்	आकाशं	ஆகாசத்தை
		छादयन्तः इव	மறைக்கின்றவர்ளென
		पुप्लुवुः	பாய்ந்தார்கள்.

प्लवमानाः खमाप्लुत्य ततस्ते काननौकसः। नन्दनोपममासेदुर्वनं द्रुमलतायुतम् ॥ ७॥

खं	ஆகாசத்தில்	ततः	அனந்தரம்
आप्लुत्य	பாய்ந்து	नन्दनोपमं	நந்தவனத்திற்கொப்பாய்
प्लवमानाः	பறந்துவரும்	द्रुमलतायुतं	மரங்களும் கொடிகளும் [அடர்ந்த
ते	அந்த	वनं	வனத்திற்கு
काननौकसः	வானரர்கள்	आसेदुः	வந்துசேர்ந்தார்கள்.

यत्तन्मधुवनं नाम सुग्रीवस्याभिरक्षितम्। अधृष्यं सर्वभूतानां सर्वभूतमनोहरम् ॥ ८॥

सर्वभूतानां	எல்லாப் பிராணிகளுக்கும்	अभिरक्षितं	நன்கு பரிசீலிக்கப்பட்டது
अधृष्यं	உட்புகக்கூடாததாய்,	यत्	எதுவோ,
सर्वभूतमनोहरं	எல்லாப்பிராணிகளுக்கும் மனோஹரமாய்,	तत्	அதுதான்
		सुग्रीवस्य	ஸுக்ரீவனுடைய
		मधुवनं नाम	மதுவனம் என்பது.

यद्रक्षति महावीर्यः सदा दधिमुखः कपिः। मातुलः कपिमुख्यस्य सुग्रीवस्य महात्मनः ॥

कपिमुख्यस्य	வானரமுக்கியரும்	दधिमुखः	ததிமுகனென்ற
महात्मनः	மஹாத்மாவுமான	कपिः	வானரன்
सुग्रीवस्य	ஸுக்ரீவனுடைய	यत्	இதை
मातुलः	மாதுலனும்	सदा	இடைவிடாது
महावीर्यः	மஹா வீர்யமுடையவனுமான	रक्षति	பரிபாலித்துவருகின்றான்.

ते तद्वनमुपागम्य बभूवुः परमोत्कटाः । वानरा वानरेन्द्रस्य मनःकान्तं महावनम् ॥१०॥

ते	அந்த	तत् वनं	அந்த வனத்தில்
वानराः	வானரர்கள்	उपागम्य	கூடிச்சேர்ந்து
वानरेन्द्रस्य	வானரேந்திரருக்கு	परमोत्कटाः	உள்ளடங்காத உற்சாகமுடையவர்களாக
मनःकान्तं	மிக இஷ்டமானதும்		
महावनं	மஹாவனமுமான	बभूवुः	ஆனார்கள்.

ततस्ते वानरा हृष्टा दृष्ट्वा मधुवनं महत् । कुमारमभ्ययाचन्त मधूनि मधुपिङ्गलाः ॥११॥

ततः	அப்பொழுது	दृष्ट्वा	கண்டு
मधुपिङ्गलाः	தேனைப்போன்றபிங்கள வர்ணமுடைய	हृष्टाः	பெருங்களிப்படைந்தவர்களாய்
ते वानराः	அந்த வானரர்கள்	कुमारं	இளவரசரைப் பார்த்து
महत्	மஹத்தான	मधूनि	தேன்களை
मधुवनं	மதுவனத்தை	अभ्ययाचन्त	அபேக்ஷித்தார்கள்.

ततः कुमारस्तान् वृद्धाञ्जाम्बवत्प्रमुखान् कपीन् । अनुमान्य ददौ तेषां निसर्गं मधुभक्षणे ॥

कुमारः	இளவரசன்	ततः	அதன்மேல்
तान्	அந்த	तेषां	அவர்களுக்கு
जांबवत्प्रमुखान्	ஜாம்பவந்தர் முதலிய	मधुभक्षणे	தேனுண்ணுவதில்
वृद्धान्	முதியவர்களான		
कपीन्	வானரர்களை	निसर्गं	அனுமதியை
अनुमान्य	ஸம்மதிக்கச் செய்து	ददौ	அளித்தான்.

ततश्चानुमताः सर्वे संप्रहृष्टा वनौकसः । मुदिताश्च ततः केचित् प्रनृत्यन्तोऽभवंस्ततः ॥

ततः च	ஏற்கனவே	संप्रहृष्टाः	அளவுகடந்த ஆனந்தமுற்றார்கள்.
मुदिताः	மகிழ்ச்சிகொண்டிருந்த		
वनौकसः	வானரர்கள்	ततः	அப்போதிலிருந்து
सर्वे च	எல்லோருமே	केचित्	சிலர்
अनुमताः	அனுமதிபெற்றவர்களாய்	प्रनृत्यन्तः	கூத்தாடுபவர்களாக
ततः	அதனால்	अभवन्	ஆனார்கள்.

गायन्ति केचित् प्रणमन्ति केचिन्नृत्यन्ति केचित् प्रहसन्ति केचित् ।
पतन्ति केचिद्विचरन्ति केचित् प्लवन्ति केचित् प्रलपन्ति केचित् ॥ १४ ॥

केचित् गायन्ति	சிலர் பாடுகிறார்கள்;	केचित् पतन्ति	சிலர் குதித்துக் கீழே விழுகிறார்கள்;
केचित्	சிலர்		
प्रणमन्ति	கவிழ்ந்து விழுகிறார்கள்;	केचित्	சிலர்
केचित्	சிலர்	विचरन्ति	இங்குமங்கும் திரிகிறார்கள்;
नृत्यन्ति	நர்த்தனம் பண்ணுகிறார்கள்;	केचित्	சிலர்
केचित्	சிலர்	प्लवन्ति	உயரக் கிளம்புகிறார்கள்;
प्रहसन्ति	பரிஹாஸமாகச் சிரிக்கிறார்கள்;	केचित्	சிலர்
		प्रलपन्ति	பிதற்றுகிறார்கள்.

परस्परं केचिदुपाश्रयन्ते परस्परं केचिदुपाक्रमन्ते ।
परस्परं केचिदुपब्रुवन्ते परस्परं केचिदुपारमन्ते ॥ १५ ॥

केचित्	சிலர்
परस्परं	ஒருவரையொருவர்
उपाश्रयन्ते	அவலம்பிக்கிறார்கள்;
केचित्	சிலர்
परस्परं	ஒருவரையொருவர்
उपाक्रमन्ते	பிடித்துத்தள்ளுகிறார்கள்;
केचित्	சிலர்
परस्परं	ஒருவரையொருவர்
उपब्रुवन्ते	நெருங்கி வாயாடுகிறார்கள்;
केचित्	சிலர்
परस्परं	ஒருவரோடொருவர்
उपारमन्ते	கூடி விளையாடுகிறார்கள்

द्रुमाद्द्रुमं केचिदभिद्रवन्ते क्षितौ नगाग्रान्निपतन्ति केचित् ।
महीतलात् केचिदुदीर्णवेगा महाद्रुमाग्राण्यभिसंपतन्ति ॥ १६ ॥

केचित्	சிலர்
द्रुमात्	ஒரு மரத்திலிருந்து
द्रुमं	மற்றொரு மரத்திற்கு
अभिद्रवन्ते	தாவுகிறார்கள்;
नगाग्रात्	மரத்தின் நுனியிலிருந்து
क्षितौ	தரையில்
केचित्	சிலர்
निपतन्ति	குதிக்கிறார்கள்;
केचित्	சிலர்
महीतलात्	தரையிலிருந்து
उदीर्णवेगाः	அதிவேகசாலிகளாய்
महाद्रुमाग्राणि	பெரிய மரங்களின் நுனிகளை
अभिसंपतन्ति	தாவிப்பற்றுகிறார்கள்.

गायन्तमन्यः प्रहसन्नुपैति हसन्तमन्यः प्ररुदन्नुपैति ।
रुदन्तमन्यः प्रणुदन्नुपैति नुदन्तमन्यः प्रणदन्नुपैति ॥ १७ ॥

गायन्तं	பாடிக்கொண்டிருக்கிறவனை
प्रहसन्	சிரித்துக்கொண்டிருக்கிற
अन्यः	வேறொருவன்
उपैति	கிட்டுகிறான்;
हसन्तं	சிரித்துக்கொண்டிருக்கிறவனை
अन्यः	வேறொருவன்
प्ररुदन्	அழுதுகொண்டே
उपैति	கிட்டுகிறான்;
रुदन्तं	அழுதுகொண்டிருக்கிறவனை
अन्यः	வேறொருவன்
प्रणुदन्	தூண்டிக்கொண்டே
उपैति	கிட்டுகிறான்;
नुदन्तं	தூண்டிக்கொண்டிருக்கிறவனை
अन्यः	வேறொருவன்
प्रणदन्	இரைந்துகொண்டே
उपैति	கிட்டுகிறான்.

समाकुलं तत् कपिसैन्यमासीन्मधुप्रपानोत्कटसत्त्वचेष्टम् ।
न चात्र कश्चिन्न बभूव मत्तो न चात्र कश्चिन्न बभूव तृप्तः ॥ १८ ॥

तत् कपिसैन्यं	அந்த வானரஸேனை
मधुप्रपानोत्कटसत्त्वचेष्टं	மதுவைக்குடித்து மிதமிஞ்சின நெஞ்சும் செயலுமாய்
समाकुलं	தலைகீழாய்
आसीत्	ஆயிற்று.
अत्र	இதில்
न मत्तः	மதங்கொள்ளாதவன்
कश्चित् च	ஒருவனாவது
न बभूव	இல்லை.
अत्र	இதில்
न तृप्तः	திருப்தியடையாதவன்
कश्चित् च न बभूव	ஒருவனாவது இல்லை.

ततो वनं तत्परिभक्ष्यमाणं द्रुमांश्च विध्वंसितपत्रपुष्पान् ।
समीक्ष्य कोपाद्दधिवक्त्रनामा निवारयामास कपिः कपींस्तान् ॥ १९ ॥

दधिवक्त्रनामा	ததிமுகன் என்ற
कपिः	வானரன்
ततः	அப்பொழுது
द्रुमान्	மரங்களை
विध्वंसित-पत्रपुष्पान्	இலைகளும்புஷ்பங்களும் முறித்துத் தள்ளப்பட் டிருப்பவைகளாகவும்
तत् वनं	அந்த வனத்தை
परिभक्ष्यमाणं च	எல்லாம் பாழாக்கப்பட் [டிருப்பதாயும்
समीक्ष्य	கண்டு
कोपात्	சினத்தால்
तान् कपीन्	அந்த வானரர்களை
निवारयामास	விலக்கினான்.

स तैः प्रवृद्धैः परिभर्त्स्यमानो वनस्य गोप्ता हरिवीरवृद्धः ।
